
லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

மலர்-09 இதழ்-05 அக்டோபர் - 2020 மாத இதழ் விலை ₹ 10

ISSN : 2582-5275



## பசல் பீமா காப்பீடு திட்டம் பலனளிக்குமா?

makkalvisaranai


வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
GENERAL ENERGY TONIC
Herbal Tonic
Natural Health Care
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

"அன்பாய் அனைவரும் ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும் வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும் பெற்றிடுவோம்"

# முதலிடத்தை நோக்கி இந்தியா

உலகின் முதலிடத்தை நோக்கி கரோனா பாதிப்புக்கு உள்ளானவர்களின் பட்டியலில் வேகமாக நகர்ந்துகொண்டிருக்கிறது இந்தியா. முன்னேறிய பல நாடுகளை ஒப்பிட பரிசோதனைகளின் அளவு குறைவு, பரிசோதனைகளில் வெளிப்படும் குறைபாடு என்கிற அளவிலேயே எண்ணிக்கை இந்த அளவை எட்டியிருக்கிறது என்றால், கண்டறியப்படாத தொற்றுகளின் எண்ணிக்கை பல மடங்கு இருக்கும். மே மாதத்திலேயே இந்தியா 64 லட்சம் தொற்றாளர்களைக் கொண்டிருக்கும் சாத்தியத்தைக் கொண்டிருந்தது என்பதைக் குறிப்புணர்த்தும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வறிக்கையை இங்கே சுட்டிக்காட்டலாம். பெரும்பாலான தென்கிழக்காசிய நாடுகளைப் போல, கரோனா சார்ந்து நிகழும் இறப்புகளின் விகிதம் இந்தியாவிலும் குறைவாகவே இருந்தாலும், அதிகமான எண்ணிக்கையிலானவர்களை நாம் இழந்துகொண்டே வருகிறோம் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இத்தகு சூழலில் ஒவ்வொரு உயிரையும் பாதுகாக்க பரிசோதனை, சிகிச்சை, நோயை எதிர்கொள்ளும் அணுகுமுறை எல்லாவற்றிலுமே நம் பார்வைகளை அவ்வப்போது உடனடியாக நாம் புதுப்பித்துக்கொள்ளுதல் அவசியம்.

பரிசோதனைகளின் முக்கியத்துவம் தொடர்ந்து பேசப்படுகிறது. அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகம் கண்டறிந்த எச்சில் பரிசோதனை இந்தியாவுக்கு ஒரு நற்செய்தி ஆகும். துரிதமான, அதிகம் செலவுபிடிக்காத, எச்சில் மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படும் மிகவும் நுட்பமான இந்தப் பரிசோதனை முறையை மேற்கொள்வது தொடர்பில் இந்தியா சிந்திக்க வேண்டும். ஒருவேளை எதிர்பார்க்கும் பலனை அது தராதபட்சத்தில், நாம் வேறொன்றை முயலலாம். ஆனால், இத்தகு முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும். ஊரடங்குக்கு வேகமாக விடைகொடுத்த கர்நாடகத்தில் இப்போது பரவல் அதிகரிக்கிறது. ஊரடங்கிலிருந்து வெளியே வர கர்நாடகம் காட்டிய அக்கறையைக் குறைகூறிட முடியாது. ஆனால், இப்படி ஒரு பிராந்தியத்தில் தொற்று அதிகரிக்கையில், அதைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான அதிகாரங்களும் மாநில அரசுகளிடம் இருக்க வேண்டும். எப்படி ஊரடங்கை அமலாக்குவதில் ஒரே மாதிரியான, மையப்பட்ட அணுகுமுறை தவறானதோ அப்படியே ஊரடங்கிலிருந்து வெளியேறுவதை அமலாக்குவதிலும் ஒரே மாதிரியான, மையப்படுத்தப்பட்ட அணுகுமுறை தவறானதாகும். மாநிலங்களுக்கு இது தொடர்பில் முழு அதிகாரம் அளிப்பதை ஒன்றிய அரசு சிந்திக்க வேண்டும். தடுப்பூசி நம் கண்ணுக்கு எட்டிய நாட்களில் தெரியாத சூழலில் எப்படியும் கரோனாவை அனுசரித்தபடியே பழைய இயல்பான வாழ்க்கைக்கும் நாம் திரும்ப வேண்டும். அதற்கான வழி அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப நம்முடைய பார்வையைப் புதுப்பித்துக்கொண்டே அடியெடுத்துவைப்பதுதான் என்பதை அரசு உணர வேண்டும்.

**- ஆசிரியர்**

# இளைஞர்களிடமிருந்து தொடங்கட்டும் தற்சார்பு






செங்கோட்டையில் பிரதமர் மோடி ஆற்றிய உரையில்: 'தற்சார்புள்ள இந்தியா' என்பதே முக்கியப் பேசு பொருளாக இருந்தது. தற்சார்புக்கு இந்தியாவில் நெடிய வரலாறு உள்ளது. இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களைப் புறக்கணிப்பதோ அல்லது மக்களை ஒடுக்கும் பொருட்டு, விதிக்கப்பட்ட உப்பு வரியை எதிர்ப்பதோ, எதுவாயினும் அதில் காந்தியை வழிநடத்திய தாரக மந்திரம் தற்சார்புதான். தற்சார்பே கதரை இந்திய சுதந்திரப் போராட்டத்தின் அடையாள உடையாக மாற்றியது, தற்சார்பே தண்டி சத்தியாகிரகம் ஒத்துழையாமையை உருவாக்கிட வழிவகுத்தது. இன்றைய இந்தியாவில் நமது குடிமக்களின் திறன்களை மேம்படுத்துவதன் மூலமே நாம் தற்சார்பை அடைய முடியும். மக்கள்தொகைப் பகுப்பைக் கணக்கில் கொண்டு, முதலில் நமது இளைஞர்களிடமிருந்துதான் தொடங்க வேண்டும்.

ஆனால், இளைஞர்களுக்கான நமது முதலீடு போதுமானதாக உள்ளதா? 2014-ன் தேசிய இளைஞர்கள் திட்டம், 15-29 வயது வரையுள்ள நபர்களை 'இளைஞர்கள்' என வரையறுக்கிறது. இந்த இளைஞர்கள் குழுமம் 2021-ல் மக்கள்தொகையில் 26.1% ஆக இருக்கும். தேசிய இளைஞர்கள் திட்ட அறிக்கையின்படி மத்திய அரசு ஒரு இளைஞருக்குச் சுமார் ரூ.2,710 வீதம் கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, உடல்நலம் மற்றும் உணவு மானியம் ஆகியவற்றுக்காகச் செலவிடுகிறது. மொத்தத் தொகை சுமார் ரூ.90,000 கோடியளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5%-க்கும் குறைவாகும். மாநிலங்கள் அனைத்தும் இதற்கிணையாகச் செலவிடுவதாக வைத்துக்கொண்டாலும், இளைஞர்களுக்கான மொத்த முதலீடு நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1%-க்கும் குறைவாகவே இருக்கும். இளைஞர்களின் எண்ணிக்கைக்கும் ஆற்றலுக்கும் இது நிகராகாது.

**வேலையின்மையும் இளைஞர்களும்:** உலக வங்கியின் அறிக்கைப்படி, குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்காக முதலீடுசெய்யப்படாத தொகை (இழப்பு) ஒவ்வொரு ஆண்டுக்கும் உள்நாட்டு உற்பத்தியில் 4% ஆகும். இதில் 0.6% வேலைவாய்ப்பின்மையின் பங்கீடு. 2017-18 வரை, இந்தியாவின் தொழிலாளர் தொகுப்பில் இளைஞர்களின் பங்கேற்பு 38.3% ஆக உள்ளது. 2018 கணக்கீட்டின்படி 'பணியாற்றும் இந்தியாவின் நிலை' என்ற அறிக்கையில், இளைஞர்களின் வேலையின்மை விகிதம் குறைந்தபட்சம் 18.3% ஆக (அதாவது, 3.47 கோடியாக) இருக்கிறது.

மேலும், இரண்டு புள்ளிவிவரங்கள் இளைஞர்கள் வேலையின்மையின் தீவிரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. சுமார் 33% இளைஞர்கள் வேலைவாய்ப்பும் கல்வியுமற்ற (NEET) பிரிவின் கீழ் வருகின்றனர். அதோடு, இந்தியாவின் திறமையான இளைஞர்களில் 33% பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர். மேலும், குறைந்தபட்சம் 50 லட்சம் இளைஞர்கள் ஒவ்வோர் ஆண்டும் பணியாளர் தொகுப்பில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கரோனா ஊரடங்கைத் தொடர்ந்து, இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (CMIE), ஏப்ரலில் மட்டும் இளைஞர்களிடையே 2.7 கோடி வேலையிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிட்டுள்ளது. இவ்வனைத்தும், பெருந்தொற்றால் இனிமேல் வரவிருக்கும்




கடுமையான விளைவுகளும் சேர்ந்து, நம்மைக் கவலைக்குரிய பொருளாதாரச் சிக்கலில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளன.

**இனி என்ன செய்யலாம்?:** வரலாற்று நிகழ்வான 1991-ன் தாராளமயமாக்கலின் பின் பிறந்த இளைய தலைமுறையின் கையில்தான் இந்தியாவின் பொருளாதாரம், அரசியல் எதிர்காலம் உள்ளது. மக்கள்தொகைப் பகுப்பில் இளைஞர்களின் பெரும்பான்மையை உணர்ந்து, இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள இந்தியாவுக்கு இன்னும் பத்தாண்டு காலமே உள்ளது.

2010-ல் வேலையின்மை 20%-க்கு அதிகமாக உயர்ந்தபோது ஐரோப்பிய ஒன்றியத்தில் இளைஞர் உத்தரவாதத் திட்டம் உருவாகியது. இந்தத் திட்டத்தைப் போல நமது நாட்டுக்கேற்ப இந்திய இளைஞர் உத்தரவாதத் திட்டத்தைத் தொடங்க இதுவே சரியான தருணமாகும். இத்திட்டம் சட்டத்தின் ஆதரவோடு, இளைஞர்களை ஆக்கபூர்வமாக ஒருங்கிணைத்து வழிநடத்திச் செல்லும் ஒரு கட்டமைப்பாகச் செயல்படும்.

கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளிவரும் இளைஞர்கள் அல்லது வேலையிழந்த இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தங்களின் படிப்புக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற ஒரு நல்ல தரமான வேலையைப் பெறச்செய்வது அல்லது பயிற்சியின் மூலம் வேலை பெறுவதற்கு உண்டான திறன்களை அடையச்செய்வதே இத்திட்டத்தின் இலக்காக இருக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி மன்றங்கள், தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்தி ஏற்கெனவே இருக்கும் இளைஞர் திட்டங்களையும் திறன் மேம்பாட்டுக் கட்டமைப்புகளையும் ஒன்றிணைத்துச் சீரமைக்க வேண்டும்.

எப்படி நிதி ஒதுக்கீட்டில் பட்டியலினத்த வர்க்கும் பழங்குடியினருக்கும் உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறதோ, அதேபோல் இளைஞர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவீத நிதி ஒதுக்கீடு வழங்கலாம். மாநில / மாவட்ட அளவில் அங்குள்ள இளைஞர்களின் எண்ணிக்கைக்கேற்ற விகிதத்தில் செலவினங்களும் பயன்களும் சென்றுசேருமாறு ஒழுங்குபடுத்தலாம்.

இந்த இளைஞர் உத்தரவாதத் திட்டம் மற்றுமொரு பட்ஜெட் திட்டமாக மட்டுமே இருந்துவிடக் கூடாது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (MGNREGA), கிராமப்புறங்களில் வாழ்வாதாரத்தையும் சமூகப் பாதுகாப்பையும் மிகச் சிறப்பாக வழங்கிவருகிறது. எனினும், தொழிலாளர் தொகுப்பில் உள்ள இளைஞர்களில் சுமார் 4% மட்டுமே இதனால் பயனடைந்துள்ளனர். நகர்ப்புற இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டம் ஒருபுறம் புதியதாக இருக்க, கிராமப்புற இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டமும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தோடு சேர்த்து தொடங்கப்பட வேண்டும். பொருளாதாரத்தில் அடிக்கடி அமைப்புசார் மாற்றம் ஏற்படும் இந்தச் சூழலில், இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, இந்த இளைஞர் உத்தரவாதத் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட வேண்டும்.

அத்தகைய உத்தரவாதம் எவ்வகையில் இளைஞர்களின் தேவைகளைக் கண்டறியும்? மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அலுவல்கள் அமைச்சகம், 2010-ல் இளைஞர் முன்னேற்றக் குறியீட்டை முன்னெடுத்தது. அது இளைஞர் முன்னேற்றத்தில் ஆலோசனை கூறிக் கண்காணிக்கும் கருவியாக உள்ளது. இந்தக் குறியீடு, ஒவ்வொரு மாநிலத்திலும் முன்னுரிமை கொடுக்க வேண்டிய பகுதிகள், இடைவெளிகள் மற்றும் மாற்று அணுகுமுறைகள் ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது. இந்தக் குறியீடு சமூக உள்ளடக்கலுக்கு மேலும் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கிறது. சுருக்கமாக, இளைஞர் முன்னேற்றக் குறியீட்டை சரியாக அமல்படுத்தினால், அது மண்டல வாரியாக இளைஞர் உத்தரவாதத் திட்டத்தைக் கட்டமைப்பதில் பெரும் பங்கு வகிக்கும்.

நம் இளைஞர்களின் மீதான அடிப்படைக் கவனக்குவிப்பே தற்சார்பை நோக்கி நாம் எடுத்து வைக்கும் முதல் படியாகும். அரசியல்சார் விருப்பத்தை வெளிக்கொணர்ந்து, நம் இளைஞர்களுக்கு ஒரு தரமான எதிர்காலத்தை உறுதிசெய்ய இதுவே சரியான தருணமாகும்.

**– S. சுப்ரமணியன்**

# பிரதமரின் பசல் பீமா காப்பீடு திட்டம் பலனளிக்குமா?





பெருந்தொற்று காலத்திலும் கடுமையாக உழைத்து பெருமளவு அறுவடையை உறுதி செய்திருக்கும் விவசாயிகளின் கைகளில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு பத்திரமாக இருக்கிறது. பயிர் நஷ்டத்தால் ஏற்படும் நிதிச்சுமையால் விவசாயிகள் அவதியுறாத வகையில் பிரதமரின் பசல் பீமா காப்பீட்டு திட்டம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், சராசரி விளைச்சலை கருத்தில் கொண்டு நிதியின் அளவை மாவட்ட அளவில் முடிவு செய்து கொள்ளும் வாய்ப்பு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனம் இல்லாத பயிர்களுக்கு 30 சதவீதமும், நீர்ப்பசனம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு 25 சதவீதமும் மத்திய மானியம் கிடைக்கும். தானியங்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்களது பயிர் களைஒருஏக்கருக்குரூ327-க்கும், வேர்க்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்களது பயிர்களை ஒரு ஏக்கருக்கு ரூ 540-க்கும், சோளம் விதைத்துள்ள விவசாயிகள் தங்களது பயிர்களை ஒரு ஏக்கருக்கு ரூ 5215-க்கும், தினை விதைத்துள்ள விவசாயிகள் தங்களது பயிர்களை ஒரு ஏக்கருக்கு ரூ 189-க்கும், செப்டம்பர் 30-க்குள் காப்பீடு செய்து கொள்ள வேண்டும். திருச்சிராப்பள்ளியில், கரும்பு விவசாயிகள் அக்டோபர் 31-க்குள் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ 2,650 செலுத்துமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். பயிர் கடன்களை பெற்றுள்ள விவசாயிகள் தாங்கள் கடன் வாங்கியுள்ள வங்கியிலேயே காப்பீடு செய்து கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் நெல், தானியங்கள், வேர்க்கடலை, சோளம், தினை ஆகியவற்றுக்கு மொத்த காப்பீட்டு தொகையில் வெறும் 2 சதவீதமும், பருத்திப் பயிர்களுக்கு மொத்த காப்பீட்டு தொகையில் வெறும் 5 சதவீதமும் செலுத்தினால் போதும். தமிழகத்தில் இது வரை 2 லட்சத்துக்கும் அதிகமான ஹெக்டேர் பரப்பளவில் உள்ள பயிர்களுக்கு பிரதமரின் பசல் பீமா காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ 1258 கோடிக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மொத்த பிரிமீயம் தொகையான ரூ 156 கோடியில், மத்திய அரசு ரூ 58 கோடியும், தமிழ் நாடு அரசு ரூ 72 கோடியும், விவசாயிகள் ரூ 26 கோடியும் செலுத்தியுள்ளனர்.

கட்டுபடியாகக்கூடிய காப்பீட்டின் மூலம் வேளாண் உற்பத்திக்கு ஆதரவு அளிப்பதற்காக 2016 கரீப் பருவத்தில் பிரதமரின் பசல் பீமா காப்பீட்டு திட்டம் தொடங்கப்பட்டது. எதிர்பாராத நிகழ்வுகளால் பயிர் நஷ்டம்/ பாதிப்பை எதிர்கொள்ளும் விவசாயிகளுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம் வேளாண்



துறையில் நீடித்த உற்பத்திக்கு ஆதரவு அளிப்பதை பிரதமரின் பசல் பீமா காப்பீட்டு திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. புதுமையான மற்றும் நவீன வேளாண் நடைமுறைகளில் ஈடுபட விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. குறுகிய கால பருவம் சார்ந்த வேளாண் செயல் முறை கடன்கள்/குறிப்பிட்ட பயிர்களுக்கான விவசாயி கடன் அட்டை ஆகியவை வழங்கப் பட்டுள்ள விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளுக்கும் இத்திட்டம் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே வழங்கப் படுகிறது. 2017 கரிப் பருவத்தில் இருந்து பயிர் கடன் பெறுவதற்கு ஆதார் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பயிர் கடனுக்கான இலக்கு இந்த வருடம் ரூ.400 கோடியாக இருக்கும் நிலையில், திருச்சிராப்பள்ளியில் உள்ள 13,111 விவசாயிகளுக்கு இது வரை ரூ 102 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இயற்கை சீற்றங்களால் விவசாயிகள் எப்போதுமே பாதிக்கப்படுவதால், எந்தவிதமான நெருக்கடியில் இருந்தும் அவர்கள் மீளும் வகையில் திட்டங்களை அரசு செயல்படுத்து கிறது. நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நிலத்தில் பாடுபட்டு உழைக்கும் விவசாயிகளுக்கு உறுதியான வருமானத்தை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு வேளாண் சட்டங்கள் சமீபத்தில் இயற்றப்பட்டன.

- ஆசிரியர்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

மக்களின் மனக்குமுறல் மாத இதழ்

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு

மலர்-09 இதழ்-05 அக்டோபர் - 2020

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V. அருணாச்சலம், S. அனந்த கிருஷ்ணன்**, M.A.,
**A. முருகையன்,**

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்: **வீ.சிவசங்கர்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
S.சுப்ரமணியன், V.தாயுமானவன்
ரூபன் பிரசாந்த்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
S.செந்தில்குமார், குருபாலகிருஷ்ணன், R.ஜெயா சென்னை
A.D.ராஜேந்திரன் விழுப்புரம், அ.மு.ரமணாத்திரி
A.பாலகிருஷ்ணன் கோவை S.மோகன் வேலூர்


**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, C. அன்பழகன், G.பாலாஜி
G.ராஜேஷ்கண்ணா, R. சத்தியமூர்த்தி
M.முருகன், A.சரவணன், R.குமார்
M.சின்னதுரை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321



# மைக்ரோபயாலஜி படிக்க குவிந்த மாணவர்கள்

## ஆய்வக படிப்புகள் மீது ஆர்வம்

தமிழக அரசு கலைக்கல்லூரிகளில் 85 சதவீத சேர்க்கை நிறைவடைந்த நிலையில், கொரோனா காலத்தால் மைக்ரோபயாலஜி படிப்பில் சேர மாணவர்களிடம் கடும் போட்டி நிலவுகிறது. தமிழக உயர்கல்வித்துறையின் கீழ், 109 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் 80 ஆயிரத்திற்கும் அதிகமாக முதலாம் ஆண்டு இடங்கள் உள்ளன. கொரோனா ஊரடங்கு காரணமாக, நடப்பாண்டு முதன்முறையாக ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மாநிலம் முழுவதும் உள்ள முதல்தர அரசு கலைக்கல்லூரிகளில் (25 ஆண்டுகளுக்கு மேல் உள்ள) 90 சதவீத இடங்களும், இதர கல்லூரிகளில் 80 சதவீத இடங்களும் நிரம்பிவிட்டன. தற்போது காலியாக உள்ள ஓரிரு இடங்களும் விரைவில் நிரப்பப்படவுள்ளது.

இதனிடையே, நடப்பாண்டு கொரோனா வைரஸ் தொற்று, உலகம் முழுவதும் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. அந்த நீட்சி, அரசுக்கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையிலும் எதிரொலித்தது. அதாவது, வைரஸ் தொடர்பான ஆய்வு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளில் ஒன்றான பிஎஸ்சி மைக்ரோ பயாலஜி பாடப்பிரிவில் சேர வழக்கத்தை விட மாணவர்கள் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். இதனால், அனைத்து கல்லூரிகளிலும் அந்த பிரிவு வேகமாக நிரம்பியது. இதுகுறித்து அரசுக்கல்லூரி பேராசிரியர்கள் கூறியதாவது: அரசுக்கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் விருப்ப பாடம் என்பது, அந்தந்த காலகட்டத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபட்டு வருகிறது. நடப்பாண்டு யாரும் எதிர்பாராத வகையில், இளங்கலை மைக்ரோ பயாலஜி பாடப்பிரிவுக்கு கடும் போட்டி நிலவியது. பெரும்பாலான கல்லூரிகளில் அந்த பாடப்பிரிவிற்கு 40 இடங்கள் மட்டுமே உள்ளன.

ஆனால், சராசரியாக 300 பேர் வரை மைக்ரோபயாலஜி பாடப்பிரிவை கேட்டு விண்ணப்பித்திருந்தனர். ஆய்வு படிப்பான மைக்ரோபயாலஜி பிரதானமாக பார்க்கப்படுகிறது. மேலும், கொரோனா தொற்றை உறுதி செய்வதில், ஆய்வகத்தினரின் பங்கு முக்கியம். இதனால், வரும் காலங்களில் இதற்காக வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்ற காரணத்திற்காகவே, நடப்பாண்டு அந்த படிப்புக்கு அதிக போட்டி இருந்தது. இவ்வாறு பேராசிரியர்கள் தெரிவித்தனர்.

– V. அருணாச்சலம்



# சாலை விபத்தில் உதவி செய்பவர்களை காக்க விதிமுறைகள் வெளியீடு

சாலை விபத்துக்களில் உதவி செய்யும் கருணை உள்ளம் கொண்டவர்களை பாதுகாப்பதற்கான விதிமுறைகளை, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இந்த விதிமுறைகள், உதவி செய்பவர்களுக்கான உரிமைகளை வழங்குகிறது. விபத்துக்களில் உதவி செய்பவர்கள் மதம், நாடு, ஜாதி அல்லது பாலினம் என எந்த வேறுபாடும் இன்றி மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என அந்த விதிமுறைகளில் விரிவாக கூறப்பட்டுள்ளது. உதவி செய்தவரிடம் எந்த போலீஸ் அதிகாரியோ அல்லது மற்றவர்களோ, பெயர், அடையாளம், முகவரி அல்லது வேறு எந்த விவரத்தையோ கட்டாயப்படுத்தி கேட்க கூடாது எனவும், ஆனால், அவர் தானாக, முன்வந்து அவரைப் பற்றிய தகவலை தெரிவிக்கலாம் எனவும் அந்த விதிமுறையில் கூறப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டத் திருத்தம் 2019-ல் சேர்க்கப்பட்டுள்ள 134 ஏ பிரிவில் ‘உதவி செய்பவர்களுக்கான பாதுகாப்பு’ விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் உதவி செய்வோருக்கான உரிமைகள் அடங்கிய சாசனத்தை, ஒவ்வொரு அரசு மற்றும் தனியார் மருத்துவமனையும், ஆங்கிலம், இந்தி மற்றும் உள்ளூர் மொழியில், நுழைவாயில் பகுதி மற்றும் இணையதளத்தில் வெளியிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உதவி செய்தவர் தானாக முன்வந்து, விபத்து வழக்கில் சாட்சியாக மாற ஒப்புக் கொண்டால், அவரிடம் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி விசாரிக்க வேண்டும்.

மோட்டார் வாகன சட்டத் திருத்தத்தில், சேர்க்கப்பட்டுள்ள இந்த புதிய பிரிவின் கீழ், விபத்தில் சிக்கியவர், உதவி செய்தவரின் கவனக்குறைவால் உயிரிழந்தால் கூட எந்தவித குற்ற நடவடிக்கையையும் சந்திக்க தேவையில்லை.

**- S. சரவணன்**

# விளை பொருட்களை நேரடியாக விற்பனை செய்

மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய வேளாண் சட்டங்களால், 'கமிஷன் ஏஜன்ட்'கள் முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு, விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும். இதனால், தங்களின் வருமானம் பாதிக்கும் என்பதால், எதிர்க்கட்சிகள் அலறுகின்றன. விலை உறுதியளிப்பு மற்றும் பண்ணை ஒப்பந்தம், விவசாய விளைபொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தகம், அத்தியாவசிய பொருட்கள் திருத்தம் தொடர்பாக, மூன்று சட்டங்களை, மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த அவசர சட்டங்களுக்கு, எதிர்க்கட்சிகள் வழக்கம்போல எதிர்ப்பை கிளப்பி வருகின்றன. இந்த சட்டங்களால் விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் அதிக லாபம் கிடைக்க இருப்பது, வரும் காலங்களில் கண்கூடாக தெரியும். இது, தெரியாத விவசாயிகளையும், இந்த புதிய சட்டங்களுக்கு எதிராக திருப்பி விடும் நடவடிக்கைகளை, எதிர்க்கட்சிகள் கையில் எடுத்துள்ளன.இந்த சட்டங்களில் உள்ள முக்கிய அம்சங்கள்.

**விவசாயிகள் விளைபொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தக அவசர சட்டம்:** சாகுபடி செய்யும் இடத்திலேயே, பொருட்களை கொள்முதல் செய்ய, இந்த சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கு போக்குவரத்து கட்டணம், சுமை கூலி, தேவையற்ற அலைச்சல் உள்ளிட்டவை தவிர்க்கப்படும். விவசாயிகள் விரும்பும் இடத்தில், விளைபொருட்களை விற்பனை செய்யலாம் என்ற, சுதந்திரம் கிடைக்கும்.

இச்சட்டத்தின்படி உழவர் சந்தைகள், நுகர்வோர் சந்தைகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதால், அவை தொடர்ந்து இயங்குவதற்கு, எந்த தடையும் இருக்காது. வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு, நிரந்தர கணக்கு எண் அவசியம் என்ற அம்சம், சட்டத்தில் இடம் பெற்றுள்ளதால், அவர்களின் அங்கீகாரம் உறுதி செய்யப்படும். மின்னணு வர்த்தகம் வாயிலாக, விலையை அறிந்து, தங்கள் விளைபொருட்களை, நாடு முழுதும் விவசாயிகள் விற்பனை செய்வதற்கு வழிவகை செய்யப்படும். இதனால், கமிஷன் ஏஜன்டுகள் தொல்லையின்றி, விளைபொருட்களுக்கு உரிய விலை விவசாயிகளை சென்று சேரும்.

**அத்தியாவசிய பொருட்கள் அவசர திருத்த சட்டம்:** விலை உறுதியளிப்பு, பண்ணை ஒப்பந்த அவசர சட்டம், விவசாயிகள் விளைபொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தக சட்டம் வாயிலாக, கொள்முதல் மற்றும் குளிர்பதன கிடங்கு வசதிகள் அதிகரிக்கப்படும். இதை கருத்தில் கொண்டு, வேளாண் விளைபொருட்களை இருப்பு வைப்பதில்,



தளர்வுகள் அறிவிக்கப்பட்டு உள்ளது. அதேநேரத்தில், போர், பஞ்சம் உள்ளிட்ட அசாதாரண சூழல், இயற்கை பேரிடர் காலங்களில், தானியங்கள், பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, வெங்காயம், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் விலை ஏற்றத்தை தடுக்கவும், கட்டுப்பாடுகளை விதிக்கவும், சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

இச்சட்டத்தின்படி, தோட்டக்கலை பொருட்களின் விலை, 100 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கும் போதும், வேளாண் பொருட்களின் விலை, 50 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கும் போதும், அவற்றின் இருப்பு அளவை நெறிமுறைப்படுத்த முடியும். இதனால், 'கார்ப்பரேட்' நிறுவனங்கள், அத்தியாவசிய பொருட்களை பதுக்குவதற்கு வாய்ப்பு கிடைக்காது. விவசாயிகள் மட்டுமின்றி, பொதுமக்களும் இச்சட்டத்தால் பயன் பெறுவர். சந்தையில் ஆரோக்கியமான போட்டி ஏற்படுவதுடன், விளைபொருட்கள் வீணாவது தடுக்கப்படும்.

**விலை உறுதியளிப்பு மற்றும் பண்ணை ஒப்பந்த அவசர சட்டம்:** இச்சட்டத்தின்படி, விவசாயிகளும், கொள்முதல் செய்பவரும், வேளாண் வணிகப் பிரிவு துணை இயக்குனர் முன்னிலையில் ஒப்பந்தம் செய்ய வேண்டும். இதனால், சாகுபடி செய்வதற்கு முன்பே, பொருட்களின் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அறுவடை நேரத்தில், சந்தை விலை குறைந்தாலும், ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலை, விவசாயிகளுக்கு கிடைக்கும். சந்தையில் விலை அதிகரிக்கும்போது கொள்முதல் செய்பவர் அளிக்க வேண்டிய கூடுதல் தொகை மற்றும் ஊக்கத்தொகை குறித்தும், ஒப்பந்தம் செய்யும்போதே முடிவு செய்யலாம். எனவே, விலை அதிகரிக்கும்போது, அதற்கான பலன் விவசாயிகளுக்கு கிடைக்கும்

காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட, எளிதில் அழுகும் வேளாண் பொருட்களின் கொள்முதல்

# யும் சூழலை மத்திய அரசு ஏற்படுத்தி உள்ளது



விலை குறையும் போதோ அல்லது கொள்முதல் இல்லாத நேரத்திலோ, உரிய விலை கிடைக்காமல், விவசாயிகள் பாதிக்கப்படுவது, இச்சட்டத்தின் வாயிலாக தவிர்க்கப்படும். சாகுபடிக்கு முன்பாகவே ஒப்பந்தம் செய்வதால், விவசாயி மற்றும் கொள்முதல் செய்வோருக்கு இடையே ஒருமித்த கருத்தும், ஒளிவு மறைவற்ற வெளிப்படை தன்மையும் உறுதி செய்யப்படும்

விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள் உள்ளிட்ட இடுபொருட்கள், பயிர் காப்பீடு, பயிர் பராமரிப்பு, அறுவடை செலவுகளுக்கு, கொள்முதல் செய்பவர்கள் உதவிகள் செய்யவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இதனால், உயர் தொழில்நுட்பங்களும், தரமான இடுபொருட்களும், விவசாயிகளுக்கு கிடைக்கும்

சிறு, குறு விவசாயிகள் ஒன்றிணைந்து, ஒப்பந்த பண்ணை விவசாயம் செய்யும்போது, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, அதிக உற்பத்தியை பெற முடியும். உணவு பதப்படுத்தும் தொழில் முன்னேற்றம் அடைவதால், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகள் பெருகும். கொள்முதல் செய்பவர், விவசாயிகளின் நிலத்தில், எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது. விளைபொருட்களை கொள்முதல் செய்யும்போதே, ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட விலையும், அதற்கான ரசீதையும் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்.

**மத்திய அரசிற்கு முழு அதிகாரம் உள்ளது:** இச்சட்டம் குறித்து, தமிழக வேளாண் துறை வல்லுனர்கள் கூறியதாவது: விவசாயம், மாநில பட்டியலில் இருந்தாலும், உணவுப் பொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தகம், மத்திய பட்டியலில் உள்ளது. எனவே, இதுபோன்ற சட்டங்களை இயற்றுவதற்கு, மத்திய அரசிற்கு முழு அதிகாரம் உள்ளது. அதன்படி தான், மூன்று சட்டங்களும் இயற்றப்பட்டு உள்ளன. தமிழக அரசு, 2009 பிப்ரவரி மாதம், 'வேளாண் விளைபொருட்கள் மற்றும் கால்நடை ஒப்பந்த பண்ணை மற்றும் சேவைகள்' என்ற சட்டத்தை கொண்டு வந்தது. இந்த சட்டத்திற்கு, அதே ஆண்டு, அக்டோபர் மாதம் ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியுள்ளார். இதை ஒட்டியே, தற்போது மத்திய அரசு, விலை உறுதியளிப்பு மற்றும் பண்ணை ஒப்பந்த அவசர சட்டத்தை கொண்டு வந்துள்ளது. இதில், கூடுதல் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில், கோழி பண்ணைகள், சர்க்கரை ஆலைகள், கோகோ தொழிற்சாலைகள், தக்காளிச் சாறு தொழிற் சாலைகள் வாயிலாக, விவசாயிகளுடன் இதுபோன்ற வாய்மொழி ஒப்பந்தம் செய்யப்படுவது, நடை முறையில் உள்ளது. புதிய சட்டத்தின்படி, அதிகாரிகள் முன்னிலையில், பத்திரத்தில் உறுதிமொழி பெறப்படுவதால், விவசாயிகள் நலன் பாதுகாக்கப் படும். விலை உறுதி செய்யப்படுவதால், விவசாயிகள் நம்பிக்கையுடன் விவசாயம் செய்யலாம்.

விவசாய விளைபொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தக சட்டத்தின்படி, விவசாயிகள் எங்கு வேண்டுமானாலும், பொருட்களை விற்பனை செய்ய முடியும். தமிழகத்தில், ஏற்கனவே இந்தச் சட்டம் நடைமுறையில் உள்ளது. தமிழகத்தை பின்பற்றி, இந்த சட்டம், அனைத்து மாநிலங்களுக்கும் விரிவுப்படுத்தப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தை பொறுத்தவரை, அங்கு தனியாக பொருட்களை, விவசாயிகளால் விற்பனை செய்ய முடியாது. சந்தைகளில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

நெல், கோதுமை உள்ளிட்டவற்றை விற்பனை செய்வதற்கு, 3 சதவீதம் சந்தை கட்டணமாக செலுத்த வேண்டும். ஊரக உள்ளாட்சி மேம்பாட்டு வரி யாக, 3 சதவீதம் செலுத்த வேண்டும். கமிஷன் ஏஜன்டுகளுக்கு, 2.50 சதவீதம் கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வாறு விற்பனை கட்டணமாக, 8.50 சதவீதம் பெறப்படுகிறது.

தமிழகத்தில், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், 1 சதவீத கட்டணம் பெறப்படுகிறது. புதிய சட்டத்தால், விவசாயிகளுக்கு வருவாய் கிடைக்கும் என்பதால், 1 சதவீத கட்டணத்தை விட்டுத் தர, தமிழக அரசு முன்வந்துள்ளது.

இந்த சட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்தால், விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிப்பது நிறுத்தப்படும் எனவும், பொய்யான குற்றச்சாட்டை, அரசியல் கட்சிகள் முன்வைத்து வருகின்றன. ராபி பருவ பயிர்களான கோதுமை, பார்லி, கடுகு ஆகியவற்றுக்கு, 21ம் தேதி, குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இந்த குறைந்தபட்ச ஆதரவு விலை தொடரும் என, பிரதமரும், மத்திய அரசும், விவசாயிகளுக்கு உறுதி அளித்துள்ளனர். இவ்வாறு வேளாண் வல்லுனர்கள் கூறினர்.

– K. ரமேஷ்குமார்



முனைவர் ஆ.மவுரியன் எழுதும்



# வீரத்தமிழச்சிகளின் வரலாறு

தொடர் 35

## ஸ்ரீமதி சௌந்தரம் இராமச்சந்திரன்

**நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே, கல்வி, சுகாதாரம், பெண்ணுரிமைக்காக பல்வேறு சேவைகள் புரிந்த பெண்மணிகளில் தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் சௌந்தரம் அம்மாவுக்கு முக்கிய பங்கு உண்டு**

பெண்களின் வளர்ச்சிக்கும், கிராமப்புற குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக் காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த சௌந்தரம், அரசியல் களத்திலும் திறம்பட பணியாற்றியவர். மதுரையில் டி.வி.சுந்தரம் ஐயங்கார் மிகப் பெரிய மோட்டார் தொழிலதிபர். சுய முயற்சியினாலும், கடின உழைப்பாலும் உயர்ந்து, சிறந்த மனிதராக விளங்கியவர் திரு சுந்தரம் ஐயங்கார். நேரம் தவறாமை இந்த நிறுவன ஊழியர்களின் அடையாளம்; பண்பும், பணிவும் அந்த கம்பெனி ஊழியர்களின் அடையாள முத்திரை. மதுரை நகரப் பேருந்து சேவையை முழுமையாக ஏற்று நடத்திக் கொண்டிருந்த இந்த கம்பெனி பேருந்து இயக்கம் பற்றி கூறும்போது மதுரை வாசிகள் போற்றி புகழும் செய்தி, இவர்களது நேரம் தவறாமை. குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் வரவேண்டுமென்றால், அந்த பேருந்து சரியாக அந்த நேரத்தில் வந்து சேரும். நம் கடிகாரத்தை அதைப் பார்த்து சரி செய்து கொள்ளலாம் என்று மதுரை வாசிகள் சொல்லுவதுண்டு. அப்படிப்பட்ட புகழ்மிக்க தொழிலதிபரின் மகளாகப் பிறந்தவர்தான் சௌந்தரம்.

டி.வி.சுந்தரம் ஐயங்கார், மற்ற பல தொழிலதிபர் களைப் போல ஆங்கில ஆதிக்கத்துக்கு துணை போனவர் அல்ல. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு தரப்பினருக்கும் பல உதவிகளைச் செய்து வந்தார். இவரது மனைவி திருமதி லக்ஷ்மி அம்மாள் தான் கதர் துணியை மட்டுமே அணிவதோடு, வீடு வீடாகச் சென்று அனைவரும் கதர் துணியை அணியவேண்டு மென்று கேட்டுக் கொண்டு கதர் துணிகளையும் விற்றார். தேச நிர்மாணப் பணிகளில் மகாத்மா காந்தியடிகளின் வழியைப் பின்பற்றி பல சேவைகளை இவர் புரிந்து வந்தார். குழந்தைகள், பெண்கள் நலனில் அக்கறை கொண்டு இவர் ஆற்றிய பணிகள் ஏராளம்.

1935ஆம் ஆண்டு சௌந்தரம் டெல்லியிலுள்ள லேடி ஹார்டிஞ்சு மருத்துவக் கல்லூரியில் படித்து மருத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். பிறவியிலேயே அறிவுச் சுடராக பிரகாசித்த இவரது திறமை நாட்பட நாட்பட மேலும் மேலும் பிரகாசிக்கத் தொடங்கியது. பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராக இவர் தேர்ந்தார். எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற பிறகு மகளிர் மருத்துவம் (Gynaecology) தாய் சேய் நலம் (Obsterics), ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றார். சென்னையில் சுமார் இரண்டு ஆண்டுகள் மருத்துவராகப் பணியாற்றினார்.

இவர் டெல்லியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே சேவா கிராமம் சென்று மகாத்மாவைச் சந்தித்திருக்கிறார். அங்கு பல சேவைகளில் பங்கு கொண்டிருக்கிறார். அதுதவிர சென்னை, மதுரை ஆகிய நகரங்களிலும் பல்வேறு காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்து சுதந்திரப் போரில் தனது பங்கினை அளித்து வந்திருக்கிறார். 1937 முதல் மூன்றாண்டுகள் மதுரையில் கௌரவ மருத்துவராகப் பணியாற்றினார். 1938இல் இவர் பெண்களுக்கு கண்காணிப்பு இல்லம் (Vigilance Home) நிறுவினார். 1940இல் கேரளாவைச் சேர்ந்த சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்த




வீதி வீதியாக, கதராடை விற்பனை செய்தபோது...

ராமச்சந்திரன் என்பவரை இவர் திருமணம் செய்து கொண்டார். 1942 தொடங்கி இவர் நேரடியாக சுதந்திரப் போராட்டங்களில் கலந்து கொள்ளத் தொடங்கினார். வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் போது இவர் கேரளப் பகுதியெங்கும் சுற்றுப் பயணம் செய்து நாட்டு விடுதலைக்குப் போராடினார். தேச விடுதலைக்காக சிறை சென்ற தியாகிகளின் குடும்பங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்தார். இவரது நடவடிக்கையைக் காரணம் காட்டி திருவாங்கூர் சமஸ்தானம் இவரை சமஸ்தானத்தை விட்டு வெளியேற்றியது.

1943இல் டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டியுடன் தொடர்பு ஏற்பட்டது. அவரோடு சேர்ந்து பல சமூகப் பணிகளை மேற்கொண்டார். அன்னை கிராமிய மருத்துவப் பணி என்ற பெயரில் இவர் பல கிளைகளை அமைத்து மக்களுக்கு மருத்துவ உதவியை மேற்கொண்டார். 1945இல் இவர் கஸ்தூர்பா காந்தி நினைவு அறக்கட்டளைக்குத் தமிழ்நாட்டு பிரதிநிதியாக மகாத்மாவால் நியமிக்கப்பட்டார். 1947இல் இப்போது உள்ள காந்திகிராமம் துவக்கப் பட்டது. இரண்டு ஏக்கர் நிலத்துடன் அன்று ஆரம்பிக்கப்பட்ட காந்தி கிராமம் என்று 350 ஏக்கர் நிலப் பரப்பில் செயல்பட்டு வருகிறது. இதில் 4000க்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்து பயன் பெறுகிறார்கள்.

மதுரை சிதம்பர பாரதி, வீர சவார்க்கர் எழுதிய ‘எரிமலை’ எனும் ஆங்கில நூலைக் கொண்டு வந்து கொடுத்தார். அது அரசாங்கம் தடை செய்திருந்தது. அந்த நூலை சுமார் 250 பக்கங் களில் தமிழில் மொழி பெயர்த்து டாக்டர் சௌந்தரம் கொடுத்தார். இந்த நூல் காரைக்காலில் அச்சிடப்பட்டு ரகசியமாக நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டது. சுதந்திர தாகம் மக்களியையே பரவ இந்த நூலும் பயன்பட்டது. 1857 சிப்பாய் கலகம் என்ற பெயரில் ஆங்கில ஆசிரியர்கள் கூறும் நிகழ்ச்சி முதல் விடுதலைப் போர் என்று வீர சாவர்க்கர் விளக்கிய எழுதிய நூல் இது. இந்த ‘எரிமலை’ நூலை பலர் மொழி பெயர்த்திருக்கின்றனர். எனினும் ஆங்கில அடக்கு முறைக்கு இடையே துணிவோடு மொழிபெயர்த்த டாக்டர் சௌந்தரத்தின் பணி சிறப்பானது.

1952இல் சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் பொதுத் தேர்தலில் இவர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது சட்ட சபைக்குள் நுழைந்த முதல் பெண்மணி என புகழ் பெற்றார். வினோபா பாவே தமிழகம் விஜயம் செய்தபோது டாக்டர் சௌந்தரம் அவர்களுடன் பயணம் செய்து அவரது பூதான இயக்கத்தில் பங்கு கொண்டார். 1956இல் பிரதமர் ஜவஹர்லால் மற்றும் திருமதி இந்திரா காந்தியுடன் இவர் சீனாவிற்கு விஜயம் செய்தார். கிராமப் பொருளாதாரம், கிராம சுகாதாரம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டு பணியாற்றினார்.

1957ஆம் ஆண்டு தேர்தலில் மிகவும் பிந்தங்கிய வேடசந்தூர் தொகுதியில் நின்று சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தொகுதிக்கு கல்வி, சுகாதாரம், சாலை வசதிகள், மின்சாரம் இவற்றைக் கொண்டு வந்து பெருமை சேர்த்தார். இந்தியாவிலுள்ள நான்கு காந்தி மியூசியங்களில் மதுரை மியூசியத்தை டாக்டர் பி.என்.ராமசுப்பிரமணியத்துடன் சேர்ந்து உருவாக்கினார். 1960இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணைத் தலைவர் ஆனார். 1962ஆம் ஆண்டு தேர்தலில் திண்டுக்கல் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்தாண்டுகள் கல்வி மற்றும் சமூக நலத்துறை அமைச்சராகப் பணியாற்றினார். குழந்தைகள் கல்வி, சமூக நலம் ஆகியவற்றில் இவர் அதிக கவனம் செலுத்தினார்.

1974 இல் காந்தி கிராமத்தின் இயக்குனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தின்போது இவர் கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடையே ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட பாடுபட்டார். தான் ஒரு செல்வந்தர் வீட்டுப் பெண் என்ற நினைப்பே இல்லாமல், எப்போதும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை, சுகாதாரம், பொருளாதார வளர்ச்சி இவற்றுக்காகவே இறுதி வரை பாடுபட்டார். வாழ்க சௌந்தரம் ராமச்சந்திரன் புகழ்!

**தொடரும்**



# மூளையை தின்னும் நுண்ணுயிரி 'நெக்லீரியா ஃபோலெரி'

வீடுகளுக்கு செல்லும் குழாய் தண்ணீரில் மூளைக்குள் சென்று உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய நுண்ணுயிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், தண்ணீர் பயன்பாடு குறித்து அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்திலுள்ள லேக் ஜாக்சன் பகுதிவாழ் மக்களுக்கு உள்ளூர் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


முன்னதாக, இதுதொடர்பாக மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையில், மூளையில் தொற்றுநோயை ஏற்படுத்தி உயிரிழப்புக்கு வழிவகுக்கக் கூடிய நெய்க்லீரியா ஃபோலெரி (Naegleria fowleri) என்ற ஒரு வகை அமீபா தண்ணீரில் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.


அமெரிக்காவில் இதுபோன்ற தொற்றுகள் பரவுவது மிகவும் அரிதான ஒன்று. அதாவது, 2009 முதல் 2018க்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் இதுபோன்று 34 சம்பவங்கள் மட்டுமே பதிவாகியுள்ளன. இந்த நிலையில், நீர் விநியோக கட்டமைப்பை முற்றிலும் கிருமிநீக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், அது எத்தனை நாட்கள் எடுக்குமென்று தெரியவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, டெக்சாஸ் மாகாணத்திலுள்ள எட்டு பகுதிகளை சேர்ந்த மக்கள், கழிவறை பயன்பாட்டை தவிர்த்து வேறெதற்காகவும் குழாய் தண்ணீரை பயன்படுத்த வேண்டாமென்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். பிறகு, இந்த எச்சரிக்கை லேக் ஜாக்சன் தவிர்த்து மற்ற பகுதிகளுக்கு விலக்கிக்கொள்ளப்பட்டது.

எனினும், லேக் ஜாக்சன் பகுதிவாழ் மக்களும் தங்களது வீடுகளில் வரும் குழாய் தண்ணீரை குடிப்பதற்கு முன்னதாக நன்றாக கொதிக்க வைத்துவிட்டு பயன்படுத்தலாம் என்று அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். அதுமட்டுமின்றி, மக்கள் குழாய் தண்ணீரை பயன்படுத்தி குளிக்கும்போது அது மூக்குக்குள் செல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

இந்த நுண்ணுயிரி தாக்குதலால் குழந்தைகள், வயதானவர்கள், போதிய நோயெதிர்ப்பு சக்தி




இல்லாதவர்கள் உள்ளிட்டோர் மிகவும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய அபாயத்தில் உள்ளதாக உள்ளூர் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

மேலும், குழாய் நீர் விநியோக கட்டமைப்பை முற்றிலும் கிருமிநீக்கம் செய்யும் பணிகள் முடிவுற்றதும், மீண்டும் நீர் பரிசோதனையை மேற்கொள்ள உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில், லேக் ஜாக்சன் பகுதியை சேர்ந்த ஆறு வயது சிறுவன் நெய்க்லீரியா ஃபோலெரி நுண்ணுயிரியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த பிறகு, இதுதொடர்பான விசாரணை தொடங்கப்பட்டதாக உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## நெய்க்லீரியா ஃபோலெரி எங்கெல்லாம் காணப்படுகிறது?

நன்னீரில் இயற்கையாகவே உருவாகும் நெய்க்லீரியா ஃபோலெரி நுண்ணுயிரிகள், அவ்வப்போது உலகின் பல்வேறு பகுதிகளிலும் கண்டறியப்படுகின்றன. பொதுவாக இதுபோன்ற அசுத்தமான நீர் மூக்கு வழியாக உடலில் நுழைந்து பின்னர் மூளைக்குச் செல்லும்போது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பொதுவாக தொற்று நுண்ணுயிரிகள் காணப்படும் நீச்சல் குளத்திற்கு செல்லும்போதோ, ஏரி, குளங்கள் உள்ளிட்ட நன்னீரில் குட்டிக்கரணம் அடிக்கும்போதும் இதனால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாவதாக அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், அசுத்தமான தண்ணீரை பருகுவதன் மூலம் இந்த தொற்று ஒருவருக்கு ஏற்படாது என்றும், தொற்று பாதித்த ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு இது பரவாது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நெய்க்லீரியா ஃபோலெரி நுண்ணுயிரியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், குமட்டல், வாந்தி, தலைவலி உள்ளிட்ட அறிகுறிகள் இருக்கும். இதனால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் ஒரே வாரத்தில் உயிரிழந்துவிடுவர்.

முன்னதாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்திலும் இந்த தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. அப்போது, மக்கள் குழாய் தண்ணீர் மூக்கிற்குள் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியிருந்தனர்.

**- குருதேவ்**

# சென்னையில் திடக்கழிவு மேலாண்மை திட்டம்

## முதலமைச்சர் பழனிசாமி தொடங்கிவைத்தார்

சென்னை மாநகராட்சி 7 மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சியின் 7 மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நாட்டிலேயே முதல் முறையாக செயல் திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணி தனியார் நிறுவன பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதற்கான தொடக்க விழா சென்னை தீவுத்திடலில் நடந்தது. முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கி, கொடியசைத்து திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டும், மண்டலங்களில் உள்ள தெருக்களை பெருக்குதல், வீடுகள்தோறும் தரம்பிரித்து சேகரிக்கப்படும் கழிவுகளை, அதற்குரிய பதப்படுத்தப்படும் நிலையங்களுக்கு கொண்டு செல்லுதல், எஞ்சிய கழிவுகளை குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் ஆகிய பணிகளை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் வகையிலும், ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த உர்பசேர் சுமீத் நிறுவனத்திற்கு 8 ஆண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும்




சோழிங்கநல்லூர் ஆகிய 7 க்குட்பட்ட 92 வார்டுகளில் உள்ள 16,621 தெருக்களில் வசிக்கும் சுமார் 37 லட்சம் மக்கள் பயனடையும் வகையில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள அந்த நிறுவனத்திற்கு 24.12.2019 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. 7 மண்டலங்களில் ஓராண்டு காலத்திற்குள் அனைத்து வீடுகளிலிருந்தும் 100 சதவீதம் தரம்பிரிக்கப்பட்ட குப்பைகள் முறைப்படி பெறப்படும். இதற்காக, பழைய மூன்று சக்கர மிதிவண்டிக்குப் பதிலாக, மின்கல வாகனங்கள் பயன்படுத்தப்படும்.

தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை வீடுகள் தோறும் பெறுதல், குறைந்த உறுதி செய்யப் பட்ட கழிவுகளை பதனிடுதல், வளாகத்திற்கு கொண்டு சேர்த்தல், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்களை 6 மணி நேரத்திற்குள்





சரிசெய்தல் போன்ற 34 எண்ணிக்கையிலான செயல்திறன் குறியீடுகள் வாயிலாக பணிகளை கண்காணித்து, அதன் மதிப்பீட்டு அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு பணப்பட்டுவாடா செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பணிகளை மேற்பார்வையிட பிரத்யேகமாக மூன்றாம் நிலை ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்களின் செயல்திறன் கண்காணிக்கப்படும். தரம் பிரிக்கப்பட்ட குப்பைகள் நேரடியாக பரவலாக்கப்பட்ட குப்பை பதனிடு நிலையங்களான இயற்கை உரம் தயாரிக்கும் மையம், பொருட்கள் மீட்பு வசதி மையம், எரியூட்டும் நிலையம், உயிரி அழுத்த இயற்கை வாயு நிலையம், தோட்டக் கழிவு மற்றும் தேங்காய் மட்டை பதனிடும் மையம், வளமீட்பு மையம், உயிரி மீத்தேன் வாயு நிலையம் ஆகிய மையங்களில் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உர்பசேர் சுமீத் நிறுவனத்தின் மூலம் 125 காம்பாக்டர்கள், 38 மெக்கானிக்கல் ஸ்வீப்பர், 3,000 இ-ரிக்ஷாக்கள், 11,000 காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் போன்ற உபகரணங்களுடன், 10,844 எண்ணிக்கையிலான அனைத்து வகை பணியாளர்களும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- வீ. சிவசங்கர்**

# சிந்தனை முத்துக்கள்

வயதை கடந்து வருபவர்கள்
எல்லாம் அனுபவசாலிகள் இல்லை
வலிகளை கடந்து வருபவர்கள் தான்
அனுபவசாலிகள்.



மனைவியை நேசித்தால்
50% இதய நோயை தவிர்க்காலம்- செய்தி
அப்படினா ரெண்டு பொண்டாட்டி கட்டிக்கிட்டா
இதய நோயே வராதுல்ல...!!!








நாலு தும்மல் தொடர்ந்து வந்தால்
சில நேரம் நம்ம மேல நமக்கே
நம்பிக்கை இல்லாமல்
போய்விடுகிறது...!

கணவன் மனைவியை அடித்தால்
பேப்பர்ல செய்தியா போடுறாங்க...
மனைவி கணவனை அடித்தால்
வார இதழ்ல ஜோக்கா போடுறாங்க..!
இந்த அக்கிரமத்தை கேட்க
யாருமே இல்லையா?
இது தான் பத்திரிகை தர்மமா...?






கண்ணிலே பூக்கும் பூ கணிப்பு
கல்லிலே பூக்கும் பூ படைப்பு
கடல் நீரில் பூக்கும் பூ உப்பு
கடமையிலே பூக்கும் பூ பொறுப்பு
முகத்திலே பூக்கும் பூ சிரிப்பு
மூளையிலே பூக்கும் பூ நினைப்பு
பாசத்தில் பூக்கும் பூ பிணைப்பு
பகைவரிடம் பூக்கும் பூ எதிர்ப்பு
பள்ளியிலே மலரும் பூ படிப்பு
படித்தபின் தேடும் பூ வாய்ப்பு
வேலையிலே பூக்கும் பூ சலிப்பு
நல்ல வரிடம் பூக்கும் பூ மதிப்பு
நண்பர்களிடம் பூக்கும பூ நட்பு
உலகத்திலே சிறந்த பூ அன்பு

Hindi theriyathu poda



உனக்கு ஆயுத எழுத்தே
எத்தனைனு தெரியாது..
மூடிட்டு போடா....



ஒரு பெண்ணின் உணர்வுகளை
மதிக்கக் கற்றுக் கொண்டாலே போதும்...
தேடி வருவாள் காதலியாக தங்கையாக தாயாக
உயிருக்கு உயிரான தோழியாக...!



மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக்கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான்.































# பூமியை யார்தான் காப்பாற்றுவது?

கடந்த இருபதாண்டுகளில் சூழலியலாளர்களிடையே அதிகம் உச்சரிக்கப்பட்ட சொற்கள் புவிவெப்பமாதல், பருவநிலை மாற்றம், பசுங்குடில் விளைவு, கரிம உமிழ்வு போன்றவையாகும். இந்தச் சொற்கள் நம் அன்றாடத்தின் ஒரு பகுதியாக மாறவில்லை என்றாலும் அவை குறிப்பிடும் விளைவுகள் நம் அன்றாடத்தை வெகுவாகப் பாதித்துவருகின்றன. எனினும், இதற்கெல்லாம் நான் காரணமில்லை என்பதுபோல்தான் நம் எதிர்வினைகள் இருக்கின்றன. உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வுக்கு நாம் ஒவ்வொருவரும் எந்த அளவுக்குப் பொறுப்பேற்புடனும் அக்கறையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை கரோனா பெருந்தொற்று நமக்கு உணர்த்தியிருக்கிறது. இதே அக்கறையையும் பொறுப்பேற்பையும் சூழலியல் தொடர்பாகவும் நாம் வெளிப்படுத்த வேண்டும் என்பதை ஆக்ஸ்ஃபாம் அமைப்பும் ஸ்டாக்ஹோம் சூழலியல் நிறுவனமும் சேர்ந்து வெளியிட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது தோன்றுகிறது.

1990-2015 வரையில் வெளியிடப்பட்ட கார்பன் டையாக்ஸைடு உமிழ்வு தொடர்பான தரவுகளை வைத்து இந்த அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட 25 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஒட்டுமொத்த கார்பன் டையாக்ஸைடு உமிழ்வுக்கு உலக மக்கள்தொகையின் 50% ஏழைகளைவிட 1% பணக்காரர்கள்தான் இரண்டு மடங்கு பொறுப்பு என்று இந்த அறிக்கை கூறுகிறது. 1990-க்கும் முந்தைய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கார்பன் டையாக்ஸைடைவிட கடந்த 25 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கார்பன் டையாக்ஸைடு 60% அதிகம் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது. 50% ஏழைகளைவிட 1% பணக்காரர்கள் வெளியிட்ட கார்பன் டையாக்ஸைடு அதிகரிப்பின் விகிதம் மும்மடங்கு அதிகமாகும்.

**உயரும் கடல் மட்டம்:** நாம் வெகு வேகமாக 'கரிம பட்ஜெட்'டைத் தீர்த்துக்கொண்டுவருகிறோம் என்று இந்த அறிக்கை கூறுகிறது. 'கரிம பட்ஜெட்' (கார்பன் பட்ஜெட்) என்பது ஒருவிதக் கணக்கு. இதன்படி, வளிமண்டலத்தில் குறிப்பிட்ட அளவு வரைதான் கார்பன் டையாக்ஸைடை வெளியிட முடியும். அந்த எல்லையைத் தொட்டால் பேரழிவுகள் ஏற்படும். உலகம் தொழில்மயமாவதற்கு முன்பிருந்த வெப்பநிலையைவிட 2 டிகிரி செல்ஸியஸ் வெப்பநிலை அதிகமாகும்.



ஏற்கெனவே, உலகின் கணிசமான இடங்கள் 1.5 டிகிரி செல்ஸியஸைத் தாண்டிவிட்டிருக்கின்றன. இதனால், துருவப் பகுதிகளின் பனி உருகி கடல் மட்டம் அதிகரித்துவருகிறது. 1.5 டிகிரி செல்ஸியஸால் 0.1 மீட்டர் அளவுக்குக் கடல் மட்டம் உயர்ந்திருக்கிறது. 2 டிகிரி செல்ஸியஸைத் தொடும்போது 0.2 மீட்டர் அளவுக்குக் கடல் மட்டம் அதிகரிக்கும். அதைத் தொடர்ந்து மண் அரிப்பு, கடல் எல்லை அதிகரிப்பு, குடியிருப்புப் பகுதிகளில் கடல்நீர் புகுதல், குடிநீரெல்லாம் உவர்ப்பாதல் போன்ற விளைவுகள் ஏற்படும். நாஸாவின் கணக்குப்படி தற்போதைய விகிதத்தில் சென்றால் நூறிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்குள் கடல் மட்டம் 6 அடி அதிகரிக்கும்.

கார்பன் பட்ஜெட் 1870-ஐத் தொடக்க ஆண்டாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. அதைப் பொறுத்தவரை இதுவரை நாம் வளிமண்டலத்தில் நாம் 2,25,495,78,00,000 டன்கள் கார்பன் டையாக்ஸைடை வெளியிட்டிருக்கிறோம். ஒட்டுமொத்த கார்பன் பட்ஜெட்டில் இது 77.8%. இன்னமும் 64,503,00,00,000 டன்கள் மட்டுமே மீதமிருக்கிறது. அதாவது, 22.2%. தற்போதைய விகிதத்தில் சென்றால் இன்னும் 16 ஆண்டுகள், 97 நாட்களில் வளிமண்டலத்தில் அதிகபட்சம் எவ்வளவு கார்பன் டையாக்ஸைடு வெளியிட முடியுமோ அவ்வளவும் வெளியிடப்பட்டுவிடும். அப்போது உலக வெப்பநிலை அதிகரிப்பு 2 டிகிரி செல்ஸியஸைக் கடந்திருக்கும்.

இந்த பிப்ரவரியில் அண்டார்க்டிகாவின் வெப்பநிலை 20.75 டிகிரி செல்ஸியஸைத் தொட்டது; இதுதான் இதுவரையிலான



உச்சம். கடந்த கோடையில் ஆர்க்டிக் கடலின் பனிப்பரப்பின் மட்டம் மிகக் குறைந்த இரண்டாவது அளவைத் தொட்டது. இப்படியே போனால் 2035-ல் ஆர்க்டிக் கடல் தனது பனிப்பாறைகள் முழுவதையும் இழந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆண்டின் கோடைக் காலத்தில் சைபீரியாவின் வெப்பநிலை 10 டிகிரி செல்ஸியஸை எட்டி உச்சம் தொட்டது. கடந்த ஆண்டுதான் ஐரோப்பாவின் மிகுந்த வெப்பமான ஆண்டாகப் பதிவாகியிருக்கிறது. இதுவரையிலான வெப்பம் மிகுந்த 12 ஆண்டுகளில் 11 ஆண்டுகள் கடந்த இருபதாண்டுகளுக்குள் பதிவானவையாகும்.

**தடம் மாறும் பருவங்கள்:** 2 டிகிரி செல்ஸியஸைத் தொடுவதற்கு முன்பே நாம் ஏராளமான மோசமான விளைவுகளை அனுபவித்துவருகிறோம். கோடை காலம் முன்பைவிட அதிக வெப்பமாக இருக்கிறது; குளிர்காலம் முன்பைவிட அதிக காலம் நீடிக்கிறது. மழை பெய்ய வேண்டிய சமயங்களில் மழை பெய்வதில்லை; பருவமல்லாத சமயங்களில் அதிகமாகப் பெய்கிறது. தண்ணீர்ப் பஞ்சம், உணவுப் பஞ்சம் போன்றவை அதிகரித்துவருகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் செல்வந்த நாடுகள்தான் அதிகக் காரணம் என்றாலும் இந்த விளைவுகளை அனுபவித்துவருவது மூன்றாம் உலக நாடுகள்தான்.

கார்பன் உமிழ்வுக்குப் போக்குவரத்தும் நுகர்வும் மிக முக்கியக் காரணங்களாக இருக்கின்றன. போக்குவரத்து எனும்போது விமானப் போக்குவரத்தைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் ஒரு பயணத்தில் வெளியாகும் கார்பன் உமிழ்வில் அவ்விமானத்தில் பயணிக்கும் ஒருவருக்கு உள்ள பங்கு, மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் ஆண்டு முழுவதும் வெளியிடும் கார்பனுக்கு இணையானது என்று ஒரு கணக்கு கூறுகிறது.

இந்த நிலையில் வேறு ஒரு பிரச்சாரமும் மேற்கொள்ளப்படுகிறது. கார்பன் உமிழ்வுக்கும் பருவநிலை மாற்றம், புவிவெப்பமாதல் போன்ற வற்றுக்கும் மூன்றாம் உலக நாடுகளில் மக்கள் தொகை அதிகரிப்பதைக் காரணமாகக் கூறித் தங்கள் பொறுப்பைக் கைகழுவ செல்வந்த நாடுகள் முயல்கின்றன. ஒட்டுமொத்த நாட்டின் கார்பன் உமிழ்வு அளவு என்ற வகையில் சீனாவுக்கு முதலிடம், அமெரிக்காவுக்கு இரண்டாமிடம், இந்தியாவுக்கு மூன்றாம் இடம் என்றாலும் தனிநபர் கார்பன் டையாக்ஸைடு உமிழ்வைப் பொறுத்தவரை இந்தியா 13-வது இடத்தில் இருக்கிறது.

முதலாம் இடத்தில் இருப்பது அமெரிக்கா. அது மட்டுமல்லாமல் அடுத்த 11 இடங்களில் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மன், சீனா உள்ளிட்ட பணக்கார நாடுகளே இருக்கின்றன. மக்கள்தொகை என்பது ஒரு பிரச்சினைதான் என்றாலும் பணக்கார நாடுகளின் நுகர்வு, சுரண்டல் போன்றவைதான் கார்பன் டையாக்ஸைடு உமிழ்வுக்குப் பிரதான காரணங்கள் என்று சூழலியலாளர் ஜார்ஜ் மோன்பியோ குற்றம் சாட்டுகிறார். படிம எரிபொருள் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைத்து, ஒருகட்டத்தில் முற்றிலுமாக நிறுத்தி, மாற்று வழிமுறைகளை நாம் தேடியாக வேண்டும் என்கிறார் ஜார்ஜ் மோன்பியோ.

விமானப் போக்குவரத்தை அதிகம் பயன்படுத்து வோருக்கு அதிக வரி விதிக்க வேண்டும். கூடுமான வரை பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும். எனினும், பொதுப் போக்குவரத்துக்கு ஆதரவான பிரச்சாரம் சமீப ஆண்டுகளில் சூடு பிடிக்கத் தொடங்கியிருந்த வேளையில் கரோனா பெருந்தொற்று அதற்கு முட்டுக்கட்டை போட்டிருக்கிறது. மக்கள் பொதுப் போக்கு வரத்தைக் கண்டு அஞ்சத் தொடங்கியிருப்பது நல்ல சமிக்ஞை அல்ல. ஆகவே, பொதுப் போக்குவரத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை அரசுகள் மீட்டெடுக்க வேண்டும்.

நாம் மிகுந்த பொறுப்புணர்வோடு நடந்து கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, உலகத்தின் மிகக் குறைந்த சதவீதமுள்ள பணக்காரர்கள் தங்கள் நுகர்வைக் குறைத்துக்கொண்டாலே அது நீடித்த நல்விளைவுகளை ஏற்படுத்தும். நமது கார்பன் பட்ஜெட்டை ஊதாரித்தனமாக நாம் செலவிட்டு வருவதைப் பார்க்கும்போது நமக்கு அடுத்த தலை முறையில் அல்ல; நம் தலைமுறையிலேயே அதன் தீமைகளை நாம் அனுபவிக்க நேரிடும் என்பது தெளிவாகத் தெரிகிறது. கூடுதல் பொறுப்புணர்வும், அக்கறையும் மட்டுமே நாமிருக்கும் இந்தக் பூமியை காப்பாற்றும்.

**- கனகதுர்கா**

எளிதாக தொழில் செய்ய ஏற்ற மாநிலங்கள் தரவரிசைப் பட்டியலை மத்திய அரசு நேற்று வெளியிட்டது. இதில் தொடர்ந்து 3வது ஆண்டாக ஆந்திரா முதல் இடத்தை பிடித்தது. உத்தரப் பிரதேச மாநிலம் 10 இடங்கள் முன்னேறி 2வது இடத்திற்கு முன்னேறியது. தெலங்கானா 3வது இடத்திற்கு பின்தங்கியது. தமிழகம் 14வது இடத்தை பிடித்துள்ளது. மாநில வர்த்தக சீர்த்திருத்த செயல் திட்டத்தின் கீழ் மத்திய தொழில் மற்றும் வர்த்தக மேம்பாட்டு துறை, உலக வங்கியுடன் இணைந்து இந்தியாவில் எளிதாக தொழில் செய்ய ஏற்ற மாநிலங்கள் தரவரிசைப் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

முதலீட்டாளர் பாதுகாப்பு, மின்சார வசதி, கடனுதவி, தொழில் தொடங்க உகந்த சூழ்நிலை, தொழில் துவங்கும் நடைமுறைகள் போன்றவற்றை வைத்து இந்த தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. கடந்த 2019ம் ஆண்டுக்கான பட்டியலை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார். இதில், ஆந்திர மாநிலம் தொடர்ந்து 3வது முறையாக முதலிடத்தை பிடித்து அசத்தி உள்ளது. கடந்த 2017, 2018 ஆகிய ஆண்டுகளிலும் ஆந்திரா முதலிடத்தை பிடித்துள்ளது. கடந்த ஆண்டு 2வது இடத்தில் இருந்த தெலங்கானா மாநிலம், இம்முறை 3வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2018ல் 12வது இடத்தில் இருந்த உத்தரப்பிரதேச மாநிலம், 10 இடங்கள் முன்னேறி 2வது இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளது. டாப்-10 பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் முறையே மத்திய

# தொழில் செய்ய ஏற்ற மாநிலங்கள் பட்டியல் 15ல் இருந்து 14க்கு வந்தது தமிழகம்





பிரதேசம் (4), ஜார்க்கண்ட் (5), சட்டீஸ்கர் (6), இமாச்சல் பிரதேசம் (7), ராஜஸ்தான் (8), மேற்கு வங்கம் (9), குஜராத் (10) மாநிலங்கள் உள்ளன. தமிழகம் 14வது இடத்தில் உள்ளது. கடந்த 2018ல் 15வது இடத்திலிருந்து ஒரு இடம் முன்னேறி உள்ளது. அண்டை மாநிலமான கேரளா 28வது இடத்தில் உள்ளது. திரிபுரா கடைசி இடமான 36வது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு 3வது இடத்தில் இருந்த அரியானா இம்முறை 16வது இடத்திற்கு பின்தங்கி உள்ளது. டெல்லி 23வது இடத்தில் இருந்து 12வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. குஜராத் கடந்த 2018ல் 5வது இடத்திலிருந்து தற்போது 10வது இடத்திற்கு பின்தங்கி உள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் 13வது இடத்தில் உள்ளது. அசாம் 20, ஜம்மு காஷ்மீர் 21, கோவா 24, பீகார் 26வது இடங்களை பிடித்துள்ளன. புதுச்சேரி 27வது இடத்தில் உள்ளது.

14 இடங்கள் முன்னேறி, 63ம் இடத்தில் இந்தியா: மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நேற்று அளித்த பேட்டியில், ‘‘உலக வங்கியின் சர்வதேச அளவில் எளிதாக தொழில் செய்ய ஏற்ற நாடுகள் பட்டியலில் இந்தியா 14 இடங்கள் முன்னேறி 63வது இடத்தை பிடித்துள்ளது. மாநில அளவிலான தொழில் ஊக்குவிப்பு நடைமுறைகள் மற்றும் தரவரிசையின் மூலம் சர்வதேச அளவில் இந்தியாவின் தரவரிசையும் முன்னேறும். மாநில அளவில் தரவரிசைப் பட்டியலை வெளியிடும் சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது,’’ என்றார்.

- M. முருகம்மாள்


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : makkalvisaranainews@gmail.com
Cell : 93821 33334, 93821 44446

# இன்னும் எத்தனை அட்டைகளோ?




பத்து ஆண்டுகளுக்கு முன்பு எல்லாருக்கும் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர்அடையாள அட்டை தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டது. அப்போது வாக்காளர் அடையாள அட்டை என்பது மிகவும் முக்கியமானதாகவும், கடவுச் சீட்டுக்கு (பாஸ்போர்ட்) நிகரானதாகவும் கருதப்பட்டது. இப்போது ஒன்றன் பின் ஒன்றாக வழங்கப்படும் அட்டைகளால், வாக்காளர் அடையாள அட்டையின் முக்கியத்துவம் மறைந்துவிட்டிருக்கிறது.

வாக்காளர் அடையாள அட்டையைத் தொடர்ந்து, ஆதார் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. புகைப்படத்துடன் கூடிய ஆதார் அட்டை இருந்தால் மட்டுமே அரசின் சமூகநலத் திட்டங்கள் மூலம் பயன்களைப் பெற முடியும் என்பது ஒருபுறம்; ஆதார் அட்டை என்பது ஒருவகையில் குடியுரிமையை உறுதிப்படுத்தும் அட்டை என்கிற அளவிலான புரிதல் இன்னொருபுறம். எனவே, ஆதார் அட்டையை அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு பெற்றனர்.

வருமான வரி தாக்கல் செய்வது தவிர, வேறு எந்தவொரு செயல்பாட்டுக்கும் ஆதார் அட்டை கட்டாயமல்ல என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பே வழங்கியிருக்கிறது. ஆனால், செல்லிடப்பேசி இணைப்பு பெறுவதானால்கூட ஆதார் அட்டை இல்லாமல் கிடைக்காது என்பதுதான் யதார்த்த நிலைமை. நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்துகொள்ள, குடும்ப அட்டை பெறவோ - புதுப்பிக்கவோ, வங்கிக் கணக்கைத் தொடங்க, அசையாச் சொத்தைப் பதிவு செய்ய, இவையெல்லாம் ஏன், ரயிலில் பயணச் சீட்டைப் பதிவு செய்வதற்குக்கூட இப்போது ஆதார் அட்டை தேவைப்படுகிறது.

ஆதார் அட்டை வந்தபோது அனைத்து செயல்பாடுகளுக்கும் ஒரே அட்டையாக ஆதார் அட்டை இருக்கப் போகிறது என்று கூறப்பட்டது. ஆதார் அட்டையே கட்டாயமல்ல என்கிற உச்சநீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு, அந்த முயற்சி கைவிடப்பட்டுவிட்டது.

தாய் - சேய் தடுப்பூசித் திட்டத்திற்கு வெவ்வேறு நிறத்தில் அட்டை வழங்கப்படுகிறது. அந்த அட்டையின் நிறத்தை வைத்து அது வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் அட்டையா அல்லது அந்தோதயா பயனாளியா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.




'ராஷ்ட்ரீய ஸ்வஸ்திய பீமா யோஜனா' என்பது மத்திய அரசு வழங்கும் காப்பீட்டுத் திட்டம். இதற்கும் ஓர் அட்டை வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் தனியார் மருத்துவமனையில் ரூ.30,000 வரையிலான மருத்துவப் பரிசோதனைகளைச் செய்துகொள்வதற்கு வழிகோலப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த அட்டையும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

குறுகிய காலத்திற்கோ, நீண்ட காலத்திற்கோ பணி நிமித்தமாக மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்வோருக்கு உதவியாக இருப்பது ஆதார் அட்டை மட்டும்தான். சில மாநில அரசுகள் ஆதார் அட்டையின் அடிப்படையில், புலம்பெயர்ந்தோருக்கும் மாநில அரசின் திட்டங்கள் மூலம் உதவி வழங்குகின்றன. ஆதார் அட்டை வந்த பிறகு புதிய கணக்கைத் தொடங்குவதற்கு குடும்ப அட்டையைக் கோருவதை நிறுத்திவிட்டு, ஆதார்அட்டையை வங்கிகள் கட்டாயமாக்கி விட்டன. இந்த நிலையில்தான் கடந்த ஆகஸ்ட் மாதம் சுதந்திர தினத்தின்போது பிரதமர் நரேந்திர மோடி புதியதொரு திட்டத்தை அறிவித்தார்.

'தேசிய எண்ம சுகாதாரத் திட்டம்' (நேஷனல் டிஜிட்டல் ஹெல்த் மிஷன்) அனைவருக்கும் எண்மப் பதிவுடன் கூடிய சுகாதார அட்டையொன்றை வழங்க இருக்கிறது. இதில் சில ஐயப்பாடுகள் எழுகின்றன. ஏற்கெனவே 'ஜன் ஆரோக்கிய யோஜனா' திட்டத்தின் கீழ் ஆதார் எண் இணைக்கப்பட்ட அட்டை வழங்கப்பட்டிருக்கும் நிலையில், புதிய அட்டையால் கிடைக்கப்போகும் நன்மைகள் என்ன என்பது குறித்து பொதுவெளியில் முழுமையான புரிதல் இல்லை.

இந்தத் திட்டத்திற்காக புதிய அட்டை தேவைதானா? ஒவ்வொரு துறையையும் மேம்படுத்த அதனுடன் தொடர்புள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் திட்டம் அறிவிக்கப்படுவதும், அதற்கு ஓர் அட்டை வழங்கப்படுவதும் விசித்திரமாக இருக்கிறது.

ஏற்கெனவே ஆதார் அட்டையின் விவரங்கள் தனியாருக்கும் பொதுவெளியிலும் கசிவது குறித்த பல சம்பவங்கள் வெளிவந்திருக்கின்றன. 'ஆரோக்கிய சேது' செயலியில் தகவல் கசிவு குறித்த தேசிய அளவிலான விவாதம் எழுந்திருக்கிறது. இப்போது, 'ஆரோக்கிய சேது' செயலி கட்டாயமல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழும், ஒருங்கிணைந்த தொற்று நோய்க் கண்காணிப்புத் திட்டத்தின் கீழும் மத்திய சுகாதார அமைச்சகம் தகவல்களை சேகரித்து வைத்திருக்கிறது. மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் தொற்று நோய்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. அதேபோல, கர்ப்பிணிகள், பிரவசம், ஆறு வயதுக்குள்பட்ட குழந்தைகள் நலம் உள்ளிட்டவை குறித்த தகவல்களும் புள்ளிவிவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

அதனால் அகில இந்திய அளவில் செயல்படவும், பயனாளிகள் குறித்த தகவல்களைப் பெறவும், ஜன் ஆரோக்கிய திட்ட அட்டை ஒன்றேகூட போதுமானது. இப்படியிருக்கும் நிலையில், இன்னும் எத்தனை அட்டைகளைத்தான் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் சுமக்க வேண்டி வருமோ தெரியவில்லை.

தகவல்கள் பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றன என்றும், அட்டைதாரரின் அனுமதி இல்லாமல் தகவல் பரிமாற்றம் எதுவும் நடக்காது என்றும் பலமுறை பலரும் உறுதியளித்தாலும், தன்மறைப்பு நிலை (பிரைவஸி) மீறல் என்பது வழக்கமாக இருக்கிறதே தவிர, விதிவிலக்காக இல்லை என்பதுதான் அனுபவம்.

'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டம்போல, ஒரே அட்டை அனைத்து விவரங்களும் என்கிற நிலைமை எப்போதுதான் ஏற்படுமோ தெரியவில்லை.

– S. மோகன்

# தாய் தமிழ் மொழி

சொல்யொன்றை உயிர் ஓவியமாய்
யுகமதில் வாழும் காவியமாய்
சிந்தனையை கடைந்து படைத்து
தீட்டிட்ட தொன்மை மொழி

தானே விதையுண்டு விருச்சகமாய்
வேரோடி ஆலமரமாய் தழைத்திட்டு
இலக்கண இலக்கியம் வளம் கொளுத்து
செழுத்திட்ட செம்மொழி

தெலுகு கன்னடம் துளு மலையாளம்
என இருபத்தொன்பது புதுமொழி விழுதுகள்
தன்னிலே ஈன்றெடுத்து பிறமொழி கலவாது
உயர்தனி தமிழ் தாய்மை மொழி


தமிழ் வேந்தர்களும் மாந்தர்களும்
சங்கங்கள் நிறுவிட சான்றோர்கள்
இயிற்றிட்ட வாழ்வியியல் நூற்களால்
கல்வி சிறந்திட்ட நெறியியல் மொழி

திருநூற்கள் குறளும் நாலடியும் சிலம்பும்
தெய்வ புலவன் திருவள்ளுவரையும்
தேன்கவி புலவன் கம்பனையும்
வரமாக பெற்றிட்ட சிறப்பு மொழி

தமிழகம் ஈழம் தன் தாயகத்தில்
மலேயா சிங்கை மொரிசு பிஜு
என புலம்பெயர்ந்த பன்னாட்டில்
தலைநிமிர்ந்து புகழ்சேர் உலக மொழி

கணிணியுகத்தில் தடம் பதித்து
அறிவியியல் மொழியாய் பரிணாமித்து
இணையத்திலும் புதுமை புரட்சி செய்து
நாளும் உயரும் நம் தாய் தமிழ் மொழி

- கவிஞர் **நிவேதிதா**



# 'காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் விவசாய சட்டங்கள் கிழித்தெறிந்து குப்பையில் வீசப்படும்'

## - ராகுல் காந்தி

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் விவசாய சட்டங்கள் கிழித்தெறிந்து குப்பையில் போடப்படும் என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். புதிதாக நிறைவேற்றப்பட்ட விவசாய சட்டங்களுக்கு எதிராக மூன்று நாள் டிராக்டர் பேரணி ஒன்றை நடத்துகிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. இந்த பேரணியை தொடங்கி வைக்க பஞ்சாபின் மோகா மாவட்டத்துக்கு வந்த ராகுல் காந்தி தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இந்த மூன்று சட்டங்களும் கிழித்தெறியப்பட்டு குப்பைத் தொட்டியில் போடப்படும் என நான் உறுதியளிக்கிறேன் என ராகுல் காந்தி தெரிவித்தார். "விவசாயிகள் இந்த சட்டம் தொடர்பாக மகிழ்ச்சியாக இருந்தால் ஏன் நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெறுகின்றன? பஞ்சாபில் உள்ள ஒவ்வொரு விவசாயியும் இதுகுறித்து போராடுவது ஏன்?"

"கோவிட் 19 தொற்று சமயத்தில் இந்த சட்டத்தை என்ன தேவை? எதற்கு அவசரம்? அதை நிறைவேற்ற நீங்கள் நினைத்திருந்தால் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் இதுகுறித்து விவாதித்திருக்க வேண்டும். இந்த சட்டங்கள் விவசாயிகளுக்காக கொண்டு வரப்பட்டது என்கிறார் பிரதமர் அவ்வாறு இருந்தால் அது ஏன் அவைகளில் விவாதிக்கப்படவில்லை," என்றும் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில், விவசாய சட்டங்களை எதிர்ப்பவர்கள் "மத்தியஸ்தர்களுக்கு மத்தியஸ்தர்களாக" நடந்து கொள்கின்றன என மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் தெரிவித்துள்ளார் என்கிறது பிடிஐ செய்தி முகமை. விவசாய சட்டங்களுக்கு நாடு முழுவதும் பல எதிர்ப்புகள் எழுந்தன குறிப்பாக பஞ்சாப் மாநிலத்தில் விவசாயிகள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சட்டங்களை எதிர்த்து பா.ஜனதா கூட்டணியிலிருந்து சிரோமணி அகாலிதளம் வெளியேறியது.

அதற்கு முன்னதாக அக்கட்சியைச் சேர்ந்த அகாலிதளத்தை சேர்ந்த அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பதவி விலகினார்.



இந்த சட்டங்களில் விவசாயிகளின் நலன்களுக்கேற்ப மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என ஒரு மத்திய அமைச்சராக ஹர்சிம்ரத் கவுர் பலமுறை கேட்டுக் கொண்டபோதும் மத்திய அரசு அதற்கு செவி சாய்க்கவில்லை என அக்கட்சியின் தலைவர் சுக்பிர் பதால் தெரிவித்திருந்தார்.

**விவசாயச் சட்டம் என்றால் என்ன?:** விவசாயம் தொடர்பான மூன்று மசோதாக்களுக்கு கடந்த ஜூன் மாதம் 5ஆம் தேதியன்று நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மொத்தம் மூன்று சட்டங்கள். 1. அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் 2020, 2. விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் 2020, 3. விவசாயிகளுக்கு (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவைகள் சட்டம் 2020. இவை ஆங்கிலத்தில் முறையே Essential Commodities (Amendment) Act 2020, Farming Produce Trade and Commerce (Promotion and Facilitation) Act 2020, The Farmers (Empowerment and Protection) Agreement on Price Assurance and Farm Services Act 2020 என அழைக்கப்படுகின்றன. இந்த சட்டங்களுக்கு கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி மாலை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்தார்.

இந்த சட்டங்களை எதிர்த்து தமிழ்நாட்டிலும் திமுக உள்ளிட்ட கட்சிகள் போராட்டங்களை நடத்தின.

- AD. ராஜேந்திரன்

# இனி விவசாயிகள் மின் இணைப்புக்காக அலைய வேண்டியதில்லை! தமிழக அரசின் புதிய மாற்றங்கள்!



இந்தியாவிலேயே விவசாய மின் இணைப்புக்கு ஏகப்பட்ட சட்ட திட்டங்களும் அதில் குளறுபடிகளும் நிறைந்த மாநிலமாகத் தமிழ்நாடு நேற்றுவரை இருந்தது. இன்று அதற்கான விடிவு காலம் பிறந்துள்ளது. விவசாய மின் இணைப்பு பெறுவதில் ஏராளமான நடைமுறை சிக்கல்கள் இருந்தன. ஒவ்வொரு மின் இணைப்புக்கும் பல்வேறு ஆவணம், ஒப்புதல் என விவசாயிகள் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வந்த நிலையில் அவற்றையெல்லாம் சரி செய்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் எம்.சந்திரசேகர், உறுப்பினர்களான டி.பிரபாகரராவ், ஓய்வு பெற்ற நீதிபதி கே.வெங்கடசாமி ஆகியோர் அடங்கிய அமர்வு தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்தது. இதை அரசிதழில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

மின் இணைப்பு கோரும் விவசாயியின் கிணற்றில் கூட்டு சொந்தக்காரர் இருப்பின் கூட்டு சொந்தக்காரர் ஒப்புதல் கொடுத்தால் மட்டுமே விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நிலை உள்ளது. இதனால் பல விவசாயிகள் விவசாயத்துக்கான மின் இணைப்பு கேட்டு விண்ணப்பிக்க முடியாமல் துயரப்பட்டு வருகின்றனர். இதுபோன்ற நிலையில் இருக்கும் விண்ணப்பதாரர் உறுதிமொழி பத்திரம் கொடுத்தால் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். ஒரே சர்வே நம்பரில் அல்லது ஒரே உட்பிரிவில் சர்வே நம்பரில் ஒருவருக்கு 2 கிணறுகள் இருக்கும் பட்சத்தில் அவர் பெயரில் ஒவ்வொரு கிணற்றுக்கும் தனித்தனி மின் இணைப்பு அனுமதிக்கப்படும்.

ஆனால், குறைந்தது ஒவ்வொரு கிணற்றுக்கும் அரை ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். விவசாய மின் இணைப்பு இடமாற்றம் தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்கும் அனுமதிக்கப்படும். மின் இணைப்பை இடமாற்றம் செய்ய ஆகும் செலவை விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும். இட மாற்றத்துக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஒருவருக்கு மட்டும் சொந்தமான கிணற்றில் அவரது பெயரில் உள்ள மின் இணைப்பை வேறு இடத்திலுள்ள அவருக்கு மட்டும் சொந்தமான கிணற்றுக்கு அல்லது கூட்டாகச் சொந்தமான கிணற்றுக்கு மாற்றம் செய்து கொள்ளலாம்.

கூட்டாகச் சொந்தமான கிணற்றில் ஒருவர் பெயரில் உள்ள மின் இணைப்பை வேறு இடத்துக்கு அவருக்கு மட்டும் அல்லது கூட்டாகச் சொந்தமான கிணற்றுக்கு மாற்றம் செய்து கொள்ளலாம். இதற்கு மின் இணைப்பு உள்ள கிணற்றின் கூட்டாளிகள் பெயரில் மின் இணைப்புகள் இருக்க வேண்டும் அல்லது கூட்டாளிகள் ஒப்புதல் பெற வேண்டும். கிணறு மற்றும் நிலம் ஆகியவற்றின் உரிமைச் சான்றை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தால் போதுமானதாகும்.

வேறு எந்தவிதமான உரிமை சான்றுகளும் அவசியம் இல்லை. குறைந்தது அரை ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். மின் இணைப்புக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில் மின்மோட்டார் பொருத்துதல் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் முடித்து மின் இணைப்பு பெறத் தயாராக இருப்பதாக விவசாயி தெரியப்படுத்திய நாளில் இருந்து 3 நாள்களுக்குள் மின் இணைப்பு தர வேண்டும்.

விவசாய மின் இணைப்பில் கரும்பு அரவை, அறுவடை இயந்திரம் போன்றவற்றை இயக்க சேஞ் ஓவர் ஸ்விட்ச் அமைத்து உபயோகத்துக்குக் கொண்டு வருவதற்கு முன்பு, மின்சார அலுவலரிடம், ஏராளமான ஆவணங் களைக் கொடுத்து அனுமதி பெற வேண்டும். இப்போது எந்தவிதமான ஆவணங்களும் சான்றுகளும் இந்த அனுமதிக்கு அவசியமில்லை. அனுமதி கோரும் கடிதம் கிடைக்கப்பெற்ற 15 நாள்களுக்குள் மின்சார அலுவலர் சேஞ் ஓவர் ஸ்விட்ச் அமைப்பை பார்வையிட்டு, சோதனை செய்து சீல் செய்ய வேண்டும். டெஸ்ட் ரிப்போர்ட் நகல் ஒன்றை மனுதாரருக்கு அதே இடத்தில் வழங்க வேண்டும்.

15 நாள்களுக்குள் அனுமதி கிடைக்கப் பெறாத நிலையில், விவசாய அவசர நிமித்தம் காரணமாகச் சேஞ் ஓவர் ஸ்விட்ச்சை அனுமதிக்கப்பட்ட விவாசய தேவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது இயக்கிக்கொள்ளலாம். சேஞ்ஓவர் ஸ்விட்ச் மூலம் கொடுக்கப்படும். மின்சார மோட்டார் பளு (HP) எந்த நேரத்திலும் அனுமதிக்கப்பட்ட பிறி-க்கு மேல் இருக்கக் கூடாது. இந்த அனுமதி ஒருமுறை மட்டுமே தரப்பட வேண்டும். சேஞ் ஓவர் ஸ்விட்ச் மூலம் அனுமதிக்கப்பட்ட அனைத்து விவசாயச் செயல் மாற்றத்துக்கும் ஒவ்வொரு முறையும் அனுமதி பெறத் தேவையில்லை.

இந்த மகிழ்ச்சியான தகவல்கள் தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**- A. முருகையன்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும் துடிப்பான, உண்மையை வெளிக்கொணர சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை * அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# வள்ளலார் அருளிய காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

**இளமை தரும், தாம்பத்தியக் குறைபாடு நீக்கும், எடை குறைக்கும் கடுக்காய்!** 'காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால் கோலை ஊன்றி குறுகி நடக்கும் கிழவனும், கோலை வீசி குலாவி நடப்பானே'! இது சித்தர்கள் வாக்கு. 'கடுக்காய் உண்டால் மிடுக்காய் வாழலாம்', 'ஈனாத மாட்டுக்கு ஒரு கடுக்காய்; இளம் பிள்ளைத்தாய்ச்சிக்கு ஏழு கடுக்காய்' போன்ற பழமொழிகளும் கடுக்காயின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றன.

'உடலை அழியாத் தன்மைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், 60-க்கும் மேற்பட்ட காயகல்ப முறைகளைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக உடல், மனம், ஆன்மாவைத் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உள்ளது' என்று கூறும் திருமூலர் அதை 'அமுதம்' என்று குறிப்பிடுகிறார். அதாவது, 'தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்துக்கு ஒப்பானது' என திருமூலர் குறிப்பிட்டிருக்கிறார்.

**கடுக்காய் தாய்க்கு அதிகம் காண் நீ -**
**கடுக்காய் நோய்**
**ஒட்டி உடல் தேற்றும் உற்ற அன்னையே**
**சுவைகள்**
**ஊட்டி உடல் தேற்றும் உவந்து'**

என்ற இன்னொரு மருத்துவப் பாடலும் கடுக்காயின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

கட்டுரையின் தொடக்கத்தில் சொன்ன பழமொழியின்படி காலையில் இஞ்சிச்சாறு, பகலில் (மாலை) சுக்குக் காபி, இரவில் உறங்கப்போவதற்கு முன்னர் விதை நீக்கிய கடுக்காயைத் தண்ணீர்விட்டு, கொதிக்கவைத்து அருந்த வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் உடலில் தேங்கியிருக்கும் கழிவுகள் அனைத்தும் நீங்கிவிடும். அதாவது மலச்சிக்கல் நீங்கும்; கபம் சமநிலைப்படும். இப்படி நோய்கள் நீங்குவதன் மூலம் கிழவனும் குமரனாகலாம் என்பதே அதன் பொருள். இதில் கடுக்காயின் பங்கு அதிகம்.

சித்தர்களின் கூற்றுப்படி கல்பங்கள் உடலுக்கு வலுவூட்டி, நீண்ட ஆயுளைத் தரக்கூடியவை. மொத்தம் 108 கல்பங்கள் உள்ளதாகவும், அவற்றைச் சாப்பிடுவதால் நோய் விலகும், பிற்காலத்தில் நோய் வராமல் தடுக்கும் என்கிறார்கள் சித்தர்கள். மேலும், உடல் செல்களைப் புதுப்பித்து, உடலை வலுவாக்கி, இளமையாக இருக்கச் செய்யும். இந்தப்



பழமொழியில் சொல்லப்பட்ட கல்பங்களில் இஞ்சி, சுக்கு, கடுக்காய் ஆகியவற்றில் கல்பங்கள் செய்து 48 நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டால் சர்க்கரைநோய், இதயநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் கட்டுப்படும்; உடலில் உள்ள நச்சுகள் வெளியேறும். இஞ்சி, சுக்கு, கடுக்காயில் செய்யப்படும் கல்பங்கள் ஆண்-பெண் உறவைப் பலப்படுத்தி, குழந்தைப்பேறு தரக்கூடியவை. மணிக்கணக்கில் கம்ப்யூட்டரே கதி என்று ஒரே இருக்கையில் அமர்ந்து பணி செய்வதால், சிலர் ஆண்மைத்தன்மை குறைவதாகச் சொல்கிறார்கள்.

இந்த பாதிப்பு உள்ளவர்களுக்கு இந்த மூன்று கல்பங்களும் அருமருந்து. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உயிர் சக்தியை மீட்டுத்தந்து, குழந்தைப்பேறு கிடைக்கச் செய்யும். காலையில் வெறும் வயிற்றில் இஞ்சி கல்பம், மதிய உணவு உண்டபிறகு சுக்கு கல்பம், இரவில் கடுக்காய் கல்பம் என 48 நாள்கள் சாப்பிட்டு வந்தால், அடுத்த சில மாதங்களில் குழந்தைப்பேறு கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த 48 நாள்களில் கருமுட்டை உடையும் நாள்களில் மட்டும் தம்பதிகள் சேரலாம். மற்றபடி ஃபாஸ்ட்ஃபுட்

உணவுகளைச் சாப்பிடாமல் கம்பு, கேழ்வரகு, வெங்காயம், முருங்கைப்பூ போன்றவற்றை சேர்த்துக்கொள்வது நல்லது.

**கடுக்காய் கல்பம்:** கடுக்காய் கல்பம் செய்ய அரை கிலோ (மஞ்சள் நிற) கடுக்காய், அரை லிட்டர் பசும்பால் தேவை. பாலில் கடுக்காயைப் போட்டு, அடுப்பில்வைத்து கால் மணி நேரம் காய்ச்சவும். சூடு ஆறியதும் இறக்கி, கடுக்காயை மட்டும் வெயிலில் உலரவைக்கவும்.

மூன்று நாள்கள் உலரவைத்த பிறகு, இதை விதையுடன் மிக்ஸியில் அரைத்து, கண்ணாடி பாட்டிலில் எடுத்துவைக்கவும். கடுக்காயின் விதை நச்சு. ஆனால், அதைப் பால் ஊற்றிக் காய்ச்சியதன் மூலம் நச்சு விலகி, கல்பமாகிவிடும்.

இந்தக் கடுக்காய் கல்பத்தை ஒரு டீஸ்பூன் அளவு எடுத்து வெந்நீரில் கலந்து, இரவு உணவுக்குப் பின்னர் அருந்தலாம். மற்ற கல்பங்களைப்போல அல்லாமல் கடுக்காய் கல்பத்தை மட்டும் பல ஆண்டுகளுக்குச் சாப்பிடலாம்.

**கடுக்காய் லேகியம்:** கடுக்காய் லேகியம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதைச் சிலர் கிண்டலாகச் சொல்வதும் உண்டு. உண்மையில் கடுக்காய் லேகியம் சாப்பிடுவதால், நரைத்த தலைமுடிகூட கருகருவென வளரும்.

முற்காலங்களில் கட்டப்பட்ட கட்டடங்கள் உறுதியாக இருக்க ,கடுக்காய் சேர்த்துக் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சித்த மருத்துவ நூல்களில் கடுக்காய் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதை விதையை நீக்கிவிட்டுப் பயன்படுத்த வேண்டும்.

கடுக்காயில் பலவகைகள் உள்ளன. அதில் பிஞ்சுக் கடுக்காய் மலச்சிக்கலைப் போக்கும். மலத்தை இளக்கும்; உடலுக்கு அழகூட்டி, மெருகூட்டும். செங்கடுக்காய் காசநோயைப் (டி.பி) போக்கி மெலிந்த உடலைத் தேற்றி அழகாக்கும். வரிக்கடுக்காய் பல்வேறு நோய்களை விரட்டும்; விந்தணுக்களை அதிகரிக்கச் செய்யும்.



இரவு உறங்கச் செல்வதற்கு முன்னர் ஐந்து கிராம் கடுக்காய்த் தூளை எடுத்து, வெந்நீரில் கலந்து குடிக்க வேண்டும். இஞ்சி, சுக்கு, கடுக்காயை ஒரு மண்டலம் (48 நாள்கள்) சாப்பிட்டுவந்தால் செரிமானக் கோளாறுகள் விலகும்; மலச்சிக்கல் குணமாகும்.

கடுக்காய்த்தூளுடன் சிறிதளவு சோம்பு (பெருஞ்சீரகம்) சேர்த்து மண் சட்டியில் தண்ணீர்விட்டு நன்றாகக் காய்ச்சி, வடிகட்ட வேண்டும். அதனுடன் சுத்தமான தேன் கலந்து தினமும் இரண்டு வேளை குடித்துவந்தால் உடல் எடை குறையும்.

மூன்று கடுக்காய்த் தோல்களுடன் தேவையான அளவு இஞ்சி, மிளகாய், புளி, உளுந்து சேர்த்து நெய்யில் வதக்கி உப்பு சேர்த்து துவையலாக அரைக்கவும்.

இதைச் சாதத்துடன் பிசைந்து சாப்பிட்டுவந்தால் செரிமான சக்தி அதிகரிக்கும்; மலச்சிக்கல் விலகும்; உடல் பலம் பெறும். இப்படிப் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் கடுக்காய், உடல் பலவீனத்தைப் போக்கும்; ஆண்களின் உயிரணு குறைபாடுகளை நீக்கி என்றும் இளமையான தோற்றத்தைத் தரும்.

பொதுவாக, மலச்சிக்கல் இல்லாமல் இருந்தாலே மனிதனின் அத்தனை செயல்பாடுகளும் சரியாக இருக்கும். தாம்பத்யக் குறைபாடுஇல்லாமல் இருந்தாலே போதும். தம்பதியரின் வாழ்வு சிறப்பாக இருக்கும். இந்த அற்புதமான பணிகளை மிகச் சிறப்பாகச் செய்யக்கூடியது கடுக்காய்!

- தொடரும்

# 10 ஆயிரம் அடி உயரம்... உலகின் மிகவும் உயரமான, நீளமான அடல் சுரங்கப்பாதை நாட்டுக்கு அர்பணித்தார் பிரதமர் மோடி



உலகின் நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதை - அடல் சுரங்கப் பாதையை மணாலியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டுக்கு இன்று அர்ப்பணித்தார்.

9.02 கி.மீ நீளமுள்ள இந்த சுரங்கப்பாதை, மணாலி - லாஹுல் ஸ்பிடி பள்ளத்தாக்கை இணைக்கிறது. இதற்கு முன்பு இந்த பள்ளத்தாக்கு, ஒவ்வொரு ஆண்டும் கடும் பனிப்பொழிவு காரணமாக, துண்டிக்கப்பட்டிருக்கும். இமயமலையின் பிர் பஞ்சால் மலைத் தொடரில், அதி நவீன தொழில்நுட்பங்களுடன் இந்த சுரங்கப்பாதை கடல் மட்டத்திலிருந்து 3000 மீட்டர் (10,000 அடி) உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

இந்த சுரங்கப் பாதை, மணாலி மற்றும் லே இடையே 46 கி.மீ தூரத்தையும், 4 முதல் 5 மணி நேர பயணத்தையும் குறைத்துள்ளது. இந்த சுரங்க பாதையில், காற்றோட்டம், தீயணைப்பு, வெளிச்சம் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் உள்ளிட்ட நவீன மின் இயந்திர அமைப்புகளைக் கொண்டுள்ளது. சுரங்கப்பாதையில் ஏராளமான பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன.

சுரங்கப் பாதையின் தெற்கு நுழைவு வாயிலில் இருந்து வடக்க நுழைவுவாயில் வரை பிரதமர் திரு.நரேந்திர மோடி பயணம் செய்தார். பிரதான சுரங்கப்பாதையில் கட்டப்பட்ட, அவசரகால சுரங்க பாதையையும் அவர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் “அடல் சுரங்கப்பாதை உருவாக்குதல்” குறித்த பட கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார்.

முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் தொலை நோக்கு மற்றும் இப்பகுதி மக்களின் நீண்ட கால கனவு நனவாகியுள்ளதால்,இந்த நாள் வரலாற்று சிறப்பு மிக்க நாள் என பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அடல் சுரங்கப்பாதை இமாச்சலப் பிரதேசத்தின் பெரும்பகுதிக்கும், புதிய யூனியன் பிரதேசமான லே-லடாக்கிற்கும் உயிர்நாடியாக இருக்கப் போகிறது என்றும் மணாலிக்கும் கீலாங்கிற்கும் இடையிலான தூரத்தை 3-4 மணி நேரம் குறைக்கும் என்றும் பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறினார். இமாச்சலப் பிரதேசம் மற்றும் லே-லடாக் பகுதிகளின் சில பகுதிகள், தற்போது நாட்டின் பிற பகுதிகளுடன் எப்போதும் இணைந்திருக்கும் மற்றும் விரைவான பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று அவர் மேலம் தெரிவித்தார்.

விவசாயிகள், தோட்டக்கலை விவசாயிகள், இளைஞர்கள் ஆகியோர் தலைநகர் தில்லிக்கும், இதர மார்க்கெட் பகுதிக்கும் இனி எளிதாக செல்ல முடியும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இதுபோன்ற எல்லை இணைப்பு திட்டங்கள், பாதுகாப்பு படையினருக்கு தேவையான பொருட்களை கொண்டு செல்லவும், அவர்களின் ரோந்து பணிக்கும் உதவியாக இருக்கும் என பிரதமர் கூறினார்.

இந்த கனவை நனவாக்குவதில் தங்கள் உயிரை பணயம் வைத்த பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழிலாளர்களின் முயற்சிகளை பிரதமர் பாராட்டினார்.

அடல் சுரங்கப்பாதை, இந்தியாவின் எல்லை உள்கட்டமைப்பிற்கு புதிய பலத்தை அளிக்கப் போவதாகவும், உலகத் தரம் வாய்ந்த எல்லை இணைப்பிற்கு, இது ஒரு வாழ்க்கை சான்றாக இருக்கும் என்றும் அவர் கூறினார். எல்லைப் பகுதிகளின் உள்கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நீண்டகால கோரிக்கை இருந்தபோதிலும், எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் பல தசாப்தங்களாக கஷ்டப்படுவதற்கு மட்டுமே திட்டங்கள் முன்பு உருவாக்கப்பட்டன என்று அவர் கூறினார்.

இந்த சுரங்கப்பாதைக்கான சாலை திட்டத்துக்கு முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கடந்த 2002-ம் ஆண்டில் அடிக்கல் நாட்டியதாக பிரதமர் கூறினார். வாஜ்பாய் அரசுக்குப்பின், இந்த சுரங்க பாதை பணி மிகவும் புறக்கணிக்கப்பட்டதால், 1300 மீட்டர் மட்டுமே அதாவது 1.5 கி.மீ க்கும் குறைவான சுரங்கப்பாதை 2013-14 வரை அமைக்கப்பட்டதாக அவர் கூறினார். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 300 மீட்டர் மட்டுமே இந்த பணிகள் நடந்ததாக அவர் குறிப்பிட்டார்.




இந்த வேகத்தில் பணி நடந்தால், இந்த சுரங்கப்பாதை 2040-ம் ஆண்டுதான் முடியும் என நிபுணர்கள் அப்போது தெரிவித்தனர். இந்த பணியை மத்திய அரசு ஆண்டுக்கு 1400 மீட்டராக துரிதப்படுத்தியதாக பிரதமர் கூறினார். 26 ஆண்டுகள் மதிப்பிடப்பட்ட இத்திட்டத்தை, 6 ஆண்டுகளில் முடிக்க முடிந்ததாக பிரதமர் கூறினார். நாடு பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் முன்னேற வேண்டியிருக்கும் போது, உள்கட்டமைப்பை விரைவாக உருவாக்க வேண்டும் என அவர் கூறினார். இதற்கு அரசியல் விருப்பமும், தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பும் தேவை என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

இதுபோன்ற முக்கியமான மற்றும் பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களை நிறைவு செய்வதில், தாமதம் நிதி இழப்புகளை ஏற்படுத்துகிறது மற்றும் மக்களுக்கு பொருளாதார மற்றும் சமூக நலன்களை இழக்கச் செய்கிறது. கடந்த 2005ம் ஆண்டு இந்த சுரங்கப்பாதை கட்டுமான செலவு ரூ.900 கோடியாக இருந்தது. தொடர் தாமதம் காரணமாக, 3 மடங்கு அதிக செலவுடன் ரூ.3,200 கோடி செலவில் தற்போது இத்திட்டம் முடிவடைந்துள்ளது.

அடல் சுரங்கப் பாதை போல், பல முக்கிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என பிரதமர் கூறினார். லடாக்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தவுலத் பெக் ஓல்டி விமான தள ஓடு பாதையை விமானப்படை விரும்பினாலும், 40 முதல் 45 ஆண்டுகளாக அது முடிவடையாமல் இருந்தது.

போகிபீல் பாலத்தின் பணிகளும் அடல் ஆட்சி காலத்தில் தொடங்கின, ஆனால் அதன் பணிகள் பின்னர் குறைந்துவிட்டன என்று பிரதமர் கூறினார். இந்த பாலம் அருணாச்சலுக்கும் வடகிழக்கு பிராந்தியத்திற்கும் இடையிலான முக்கிய இணைப்பை வழங்குகிறது. 2014 க்குப் பிறகு இந்த பணி வேகம் அடைந்தது என்றும், அடல் ஜி பிறந்தநாளை முன்னிட்டு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டது என்றும் பிரதமர் கூறினார்.

பீகாரின் மிதிலாஞ்சல் பகுதியில் கோசி பெரிய பாலத்துக்கு அடல் பிஹாரி வாஜ்பாய் அடிக்கல் நாட்டினார் என்றும், 2014ம் ஆண்டுக்குப்பின் அதன் பணிகள் துரிதப்படுத்தப்பட்டதால், அந்த பாலம் சில வாரங்களுக்கு முன் திறக்கப்பட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

நிலைமை தற்போது மாறியுள்ளதாகவும், கடந்த 6 ஆண்டுகளில், எல்லை கட்டமைப்பு, முழு வேகத்துடன் மேம்படுத்தப்படுவதாக பிரதமர் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு படையினரின் தேவைகளை கவனித்துக்கொள்வது அரசாங்கத்தின் மிக உயர்ந்த முன்னுரிமைகளில் ஒன்றாகும் என்று பிரதமர் கூறினார். ஆனால் இதுவும், முன்னர் சமரசம் செய்யப்பட்டு, நாட்டின் பாதுகாப்புப் படைகளின் நலன்களும் சமரசம் செய்யப்பட்டன என பிரதமர் கூறினார்.

பாதுகாப்பு படையினருக்கு ஒரே பதவி, ஒரே ஓய்வூதிய திட்டம் அமல்படுத்துதல், நவீன போர் விமானங்கள், ஆயுதங்கள், தளவாடங்கள் கொள்முதல் செய்ய மத்திய அரசு பல நடவடிக்கைகள் எடுத்தாகவும், இவற்றையெல்லாம் முந்தைய அரசு கிடப்பில் போட்டதாகவும், பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறினார். இவற்றை நிறைவேற்ற முந்தைய அரசுகளுக்கு, அரசியல் விருப்பம் இல்லை எனவும், நாட்டில் இந்த சூழல் இன்று மாறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ராணுவ தளவாட தயாரிப்பில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு தளர்வுகள் அளிக்கும் வகையில் முக்கிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும், இதன் மூலம் நவீன ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் உள்நாட்டிலேயே தயாரிக்க முடியும் என பிரதமர் கூறினார்.

முப்படை தலைமை தளபதி பதவியை உருவாக்கும் வகையில் சீர்திருத்தம் செய்யப்பட்டதாகவும், இதன் மூலம் பாதுகாப்பு படைகளின் தேவைக்கேற்ப உற்பத்தி மற்றும் கொள்முதலில் ஒருங்கிணைப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

வளர்ந்து வரும் இந்தியாவின் உலகளாவிய நிலைக்கு ஏற்ப, நாட்டின் கட்டமைப்புகளையும், பொருளாதாரத்தையும், யுக்திகளையும் மேம்படுத்த வேண்டும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

தற்சார்பு இந்தியா திட்ட தீர்மானத்துக்கு, அடல் சுரங்கப்பாதை ஜொலிக்கும் உதாரணம் என பிரதமர் கூறினார்.

**– அகிலாண்டேஸ்வரி**

# பயம் கண்ணை மறைக்கும்

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான்.



உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

– M. நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.



AYUSHMAN BHARAT
NATIONAL HEALTH PROTECTION MISSION
COVERAGE UP TO
5 LAKH RUPEES PER FAMILY PER YEAR
OVER 10 CRORE POOR & VULNERABLE FAMILIES COVERED
BENEFICIARIES OF AROUND
50 CRORE INDIANS
BIMAR NAHI RAHA LACHAAR,
HO RAHA MUFT UPCHAAR
World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.
For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.
Benefits to over 10 crore poor and vulnerable families and more than 50 crore beneficiaries across the country
Annual healthcare benefits of up to Rs. 5 Lakh for every entitled family
Access to healthcare services in all government and empanelled private hospitals
Toll-Free helpline number
14555/1800111565
www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Posted at EGMORE RMS / 1 (Patrika Channel). **OCTOBER - 2020**
RNI No.: **TNTAM44870/2012**. Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month

# APPLE PRINTERS








*We Can Do any Printing Job*

**BROCHURES - MAGAZINE - BOOKS - BUSINESS CARDS**
**ID CARDS - CREATE LOGO - ENVELOPES - CATALOGS**
**STICKERS - GRAPHICS ELEMENTS AND ANYTHING**

# 7/13, PONMANACHEMMAL STREET,
M.G.R NAGAR, CHENNAI - 600 078.
93821 33334, 044 - 4861 5321
appleprintersam@gmail.com